SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"GUARDIAN"
JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 39-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 6-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பத்திமாவும் போர்த்துக்காலும்

### செபமாலைச் சம்பாவனை

(முன்தொடர்ச்சி)

சந்திரனின் இந்த அற்புத காட்சியைக்கொண்டு பரிசுத்த தேவதாயார் தமது பத்திமாச் செய்தியைப் பரப்ப அமெரிக்கராகிய நாமுமே துணைச்செய்ய வேண்டுமென்பதற்கான ஓர் அடையாளத்தை நமக்கும் தந்திருக்கிருரென்றே உணரலானேம். சிலுவையானது மீட்பினதும், இரட்சணியத்தினதும் திருச்சின்னமாகும். ஆனல், சிலுவைப்பாதையானது செபத்தினதும், தபத்தினதும், பரிகாரத்தினதும் யாத்திரை வாழ்க்கையாகும்.

போர்த்துக்கேயமக்கள் தேவதாயார்மட்டில் எப்போதைக்குமே வேகரமானபக்திபற்றுதலுடையோராய் இருந்துவருகின்ருர்கள். அந்நாட்டிலுள்ள புராதன சந்நியாசமடங்கள், கன்னிகாமடங்கள், ஆலயங்கள், பிரஸ்தாப ஞாபகசின்னங்கள் எல்லாம் மரியன்னைக்கு மகிமையாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அமலோற்பவ நாயகியே போர்த்துக்காலின் பாதுகாவலர். போர்த்துக்கால் "மரியாயின்நாடு" என அழைக்கப்படுகிறது. அந்நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து, போர்த்துக்கேய மக்களின் வேதவிசுவாசமும், பக்திவைராக்கியமும் பெரிதும் பாராட்டப்படத் தக்கனவாகும்.

1834-ம் ஆண்டு பிறிமேசன் சபையும், நாஸ்திகமும் போர்த்துக்கால் முழுவதும் பரவின. சந்நியாச, கன்னிகாசபைகள் அடக்கித் தடுத்துவிடப்பட்டன. அவற்றின் சொத்துகள் யாவும் அரசாங்கத்தாலே பறிமுதலாக்கப்பட்டன. இந்தக் கொடிய வேதகலாபனையாலே ஓர்காலம் அத்துணை வெகுவாக அங்கு செழிப்புற்ருேங்கியிருந்த கத்தோலிக்க சமயம் பிரலாபிக்கத்தகுந்த ஓர் கீழ்நிலைமையை அடையலாயிற்று. 1910-ம் ஆண்டு நிகழ்ந்த அரசியற் புரட்சியின்போது இது உச்சநிலை எய்தியது. அப்போது குடியரசு மாதிரியான ஓர் அரசாங்கம் அங்குஸ்தாபிக்கப்படலாயிற்று. அதன்மேல் திரும்பவும் சந்நியாச,கன்னிகாசபைகளெல்லாம் வலோற்காரமாக நாட்டைவிட்டுக் கலைக்கப்படலாயின. அவற்றின் சொத்துகள் அரசாங்கத்தால் முற்ருக அபகரிக்கப்பட்டன. இன்னும் மூன்று தலைமுறையிலே அங்கு தேவனுடையவும், அவர் திருமறையினுடையவும் நாமமேயில்லாமல் அழித்தொழித்து விடுவதாகக் குடியரசுக் கட்சியினர் விருது கூறினர்.

1917-ம் ஆண்டு பத்திமாபதியிலே பரிசுத்த செபமாலை இராக்கினி ஆறுமாதகாலம் தொடர்பாகக் காட்சியளித்து, அதனை அளித்த ஒவ்வோர்முறையும் செபம், தபம், பாவப்பரிகாரமாகிய தமது செய்தியைத் திரும்பத்திரும்ப அழுத்தமாக எடுத்துக்கூறியபோது இந்த நிலைமைதான் போர்த்துக்கால் முழுவதும் தலையெடுத்திருந்தது. வேதகலாபனைநடைபெறற அத்தனைவருடகாலத்திலும் போர்த்துக்கேயமக்கள் தங்கள் செபமாலைப்பத்தியை ஒருபோதுமே இழந்துபோகவில்லை. செபமாலைப்பத்திக்கூட்டங்கள் நவமாக ஸ்தாபிக்கப்பட்டன. பழையபத்திக்கூட்டங்கள் புத்துயிர் பெற்றன. இதற்கெல்லாம் ஓர் சம்பாவனையாகவும், அவர்களின் செபங்களுக்கெல்லாம் ஓர் தகுந்தபதிலாகவும் தேவதாயார்தாமே செபமாலைப் பத்தியைப்பற்றிப் போதிப்பதற்குத் தரிசனையருளினுரெனப் போர்த்துக்கேயமக்கள் கூறுகின்ருர்கள்.

அவர் பத்தியாவிலே தரிசனையருளியதுமுதல் போர்த்துக்காலில் கத்தோலிக்க திருமறை பெரிதும் மறுமலர்ச்சியடைந்திருக்கிறது. பெருந்தொகையானேர் மனந்திரும்பியிருக்கின்ருர்கள். திரும்பவும் கோவில்களெல்லாம் திவ்வியபூசை காண்போரும், தேவதிரவியானுமானங்களைப்பெறுவோருமாய்ப் பல்வேறு வாழ்க்கைநிலைமையிலுள்ளோர் எல்லோராலும் தேங்குகின்றன. பிரசாதிபதியும், பிரதமரும், ஓர் உத்தம கத்தோலிக்கருமான டக்றர் ஏ. ஓ. சலாசர் அவர்களது வழிநடாத்துகையின்கீழ் போர்த்துக்கால்நாடு ஐரோப்பாவிலுள்ள மற்றும் நாடுகளுக்கா[illegible]

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## சூரியோதய நாட்டில்

(முன்தொடர்ச்சி)

### ஷின்ரோயிஸ் ஆலயங்கள்

அமாடெராசுவைத் தவிர, இன்னும்பல சக்கரவர்த்திகளையும், சரித்திரக்கியாதிபெற்ற வீரர்களையும் யப்பானியர்தொழுகின்றனர். தேசத்திற்காகப் போரில் உயிர்துறந்தவீரர்கள் நாட்டின் பாதுகாவலர்களாகப் போற்றப்படுகின்றனர். ஆதலின் ஆங்காங்கே அவ்வீரர்களின் ஞாபகார்த்தமாக ஆலயங்கள் எழுப்பி நைவேத்தியங்கள் நடைபெறுவன்தக் காணலாம்.

கி. பி. ஆரும்நூற்ருண்டிலேயே புத்தம்தம் கோறியாவிலிருந்து யப்பானுக்குள் புகுந்தது. ஆயிரம்வருடங்களாக அரசுபுரிந்தது. ஆயினும்முடிவில் ஷின்ரோயிஸமே வெற்றிகண்டது. கடந்தஐம்பதுஆண்டுகளில் பற்பல பிற்போக்குச் சக்திகளையும் முறியடித்து, நாகரீகபாதையில் வெகுதூரம் முன்னேறியுள்ள யப்பான் அணுக்குண்டு அனுபவநாள்வரைஷின்ரோயிஸத்திற்கு அடிமைப்பட்டுக்கிடந்தது. இன்றுயப்பானியதீவுகளில் ஒருலட்சத்து 60 ஆயிரத்துக்குமேற்பட்ட ஷின்ரோயிஸஆலயங்கள் உள்ளன. இவற்றிறக்கண்காணிக்க 15,000 குருக்களும, 70,000 சிப்பந்திகளும் உழைக்கின்றனர்.

ஷின்ரோயிஸக் குருக்கள் போதிப்பதுகிடையாது. மக்களை ஆல்யத்திற்கு அழைப்பதுங்கிடையாது. காலையிலும்மாலையிலும் மக்கள்கொணரும் காணிக்கைகளைச் சமர்ப்பித்தலும், சில சடங்குகளை நிறைவேற்றுவதுமே அவர்களுடைய கடமை. ஷின்ரோயிஸத்தில் வேதானுசாரங்கள் வெகுசொற்பம். இவர்களுடைய தெய்வவழிபாட்டுமுறை வெகுவிநோதமானது. ஆலயத்திற்குமுன் அமைக்கப்பட்ட சிறுதொட்டியில் எப்பொழுதும்தண்ணீர்தேங்கிநிற்கும். ஆராதனைக்குவரும் பக்தர்கள் தண்ணீர் கொண்டு வாயையும், கரங்களையும் கழுவுவர். பின் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் கவனத்தைக் கவருவதற்காக ஓர்மணியையும் அடிப்பார்கள். இதன்பின் மும்முறை கரங்களைத்தட்டி, சிரசைக்கவிழ்த்து, சுருக்கமான மனச்செபங்களை முணுமுணுப்பார்கள். திரும்பவும் கைகளைத்தட்டி, அங்குள்ள பெரியஉண்டியல் பெட்டியில் காணிக்கையிட்டுவெளியேறுவார்கள். வருஷத்தில்பத்துவிழாக்கள் தேசவாரியாகநடைபெறும். அந்தவிழாக்களின்போது யப்பானியகுடிகளெல்லாம் தேசீயக் கொடியைக் கட்டாயம்பறக்கவிட வேண்டும்.

### சாமுராய்

யப்பானில பேனுவும், வாளும் எப்பொழுதும்ஒருமித்தே இயங்கியுள்ளன. அறிவிற்சிறந்தவர்களாகக் கருதப்பட்ட கலைஞர்களே வீரர்களாகவும்விளங்கினர். 'சாமுராய்'என்றழைக்கப்படும் யப்பானியவீரஅறிஞனே ஆதியில் சக்கரவர்த்தியைப் பாதுகாத்துவந்தவன். 12-ம் நூற்ருண்டில்நிலமானியமுறை(Feudalism) அமுலில்இருந்தபோது, நிலச்சுவான்தாரருக்குப் பக்கபலமாக நின்றது சாமுராய்களே. எசமானனுக்குவரும் ஆபத்தைத் தவிர்க்கத் தங்கள்உயிரையே மாய்த்துக்கொள்ளத்தயங்கமாட்டார்கள் இத்தீரர்கள். அதனல் இளைஞரைச் சாமுராய் தொழிலுக்குப் பழக்கும்போது, தற்கொலைமுறையையும் பயிற்றுவிப்பதுவழக்கம். வாளை நிறுத்தி, அதன்மீதுவீழ்ந்து மாளுவதை வீரச்செயலாக மதிக்கின்றனர் யப்பானியர். தேசத்துரோகிகள்கூட இவ்வித தற்கொலை புரிந்துகொண்டால், வீரரெனக் கொண்டாடப்படுவர். இன்று நிலச்சுவான்தாருக்குப்பதில், சக்கரவர்த்தியே மக்களின் வீரத்தியாகத்துக்குரிய இலட்சியமாக விளங்குகிருர்.

ஹிற்லரின் ஜேர்மனியில் ஆரியசாதியும், இன்றையருஷியாவில் அரசாங்கமும் உன்னதமாகக் கருதப்படுவதுபோல, யப்பானின் அரசியல்வாழ்வில் சக்கரவர்த்தியே உயிர். தனிக்குடும்பத்திலோ, குடும்பதலைவனே குடும்பஸ்தரின் உடல் பொருள் ஆவி அனைத்திற்கும் ஏக உரிமையாளன். இவ்விரு அதிகாரங்களையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒழுங்கோ, சட்டமோ கிடையாது. மனச்சாட்சி, பொறுப்புணர்வு யாவும் இந்த நியதிக்குக் கட்டுப்பட்டதே. இவ்வளவுஆழ்ந்தபதிதம் வேறு எங்குமில்லை.

ஆக, யப்பானியரின் சரித்திரத்தை உருவாக்கியதும், அயல் நாட்டுக்கொள்கைகளைக் கட்டுப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கான் கலைப்பொருட் காட்சி

1950-ம் ஆண்டின் பரிசுத்தவருட்த்திலே ரோமாபுரியில் நிகழவிருக்கும் வேதபோதக நாடுகளின் பொருட்காட்சிக்கென்று சுதேச கிறீஸ்துவ சிற்பசித்திரக் கலைகள்சம்பந்தமான பல வினப்பொருட்களையும் அனுப்பிவைக்குமாறுகேட்டு விசுவாசப்பரப்புதற்சபையின் காரியதரிசியான மொஞ். செல்சோ கொன்ஸ்ரான்ரினி ஆண்டவர் மிஷன்நாடுகளாகிய வேதபோதகநாடுகளிலுள்ள சகல மேற்றிராசனங்களுக்கும் சென்றவருடம் ஓர் திருமுகம்விடுத்திருந்தார்.

### காட்சிப்பொருட்களின் தன்மை

அத்திருமுகத்திலே அவர் குறித்த காட்சிப்பொருட்களெல்லாம் கருத்தளவில் கிறீஸ்துவமயமாகவும், மாதிரியளவில்சுதேசமயமாகவும் இருக்கவேண்டுமென்று தெளிவாக அறிவித்திருந்தார். பலவிதமான இந்தக்காட்சிப்பொருட்களில் சித்திரவேலைப்பாடுகள், கொத்துவேலைப்பாடுகள், சித்திரத்தையல்வேலைகளைக்கொண்ட திருவஸ்திரங்கள், திவ்வியநற்கருணைப் பாத்திரங்கள்போலும் திருப்பண்டங்கள் அடக்கியிருக்கவேண்டுமென்று அவர் ஆலோசனை கூறியிருந்தார். இவற்றுடன் ஆங்காங்குள்ள மறுசமயப் பலவினகலைப்பொருட்களும் அனுப்பப்படவேண்டுமென்றும்தெரிவித்திருந்தார். அதனால், இப்பொருட்காட்சியானது சகல சமயங்களினதும் கலைவிசேஷங்களைப் பூரணமாகப் பிரதிபலிப்பதாயும், அதிலிருந்து அந்தந்தக் கலைப்பொருட்கள் கிறீஸ்துவமயமான தன்மையை விசேடித்துக் காண்பிப்பதாயும் இருக்கும். இப்பொருட்காட்சியைச் சம்பேதுருவானவர் மகாஆலய முற்றத்திற்குச்செல்லும் வாயிலிலே விசேஷமாய்க் கட்டப்பெற்றுள்ள இரு கட்டிடங்களுள் ஒன்றில்நடத்துதற்குப் பரிசுத்தபாப்பரசர் மனமுவந்து சம்மதியளித்திருக்கின்றார்.

### ஆயத்தப்படும் நாடுகள்

இந்தப்பொருட்காட்சியிலே கலந்துகொள்ளவிருக்கும் நாடுகளில். சீனு, யப்பான், எகிப்து, மற்றும் ஆபிரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ், யாவா, இந்துசீனு, ஓசியானியா, இந்தியா, இலங்கை ஆதியனவும்அடங்கியிருக்கின்றன. அங்கங்கெல்லாம் மேற்றிராணிமாரும், குருமாரும் காட்சிப்பொருட்களைச் சேகரிப்பதிலே அயராது உழைத்துவருகின்றார்கள். தங்கள் விக்கார் அப்போஸ்தொலிக்கு ஆண்டவர் கேட்டுக்கொண்டதின்பேரிலே தூரமான பப்புவா தீவுவாசிகள்தானும் தங்களாலானதைச் செய்துவருகின்றார்கள். இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்படும் காட்சிப்பொருட்களில் அதிகமானவைகள் இந்தியகலையில் மிகுந்த அறிவுபடைத்தவரான யேசுசபையைச் சேர்ந்த வண. எச். ஹெறுஸ் சுவாமி அவர்களது ஆலோசனையை மேற்கொண்டு அவரது மேற்பார்வையிலே செய்யப்படும். அவரது கருத்துக்கிணங்கக் கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதோருமான ஓவியர்கள் பலரும் ஊக்கமாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

### புத்தசமய மாதிரிப் பலிபீடம்

அதிகம் மனவருட்சியைத்தரும் இந்திய காட்சிப்பொருட்களிலே மரங்கொண்டு புத்தசமயமாதிரியாகச் செய்யப்பெற்றுள்ள பலிபீடம் ஒன்றும் இருந்துவரும். இந்தியாவிலுள்ள தேவமாதாவின் பத்திச்சபைகளது வேலைப்பாடு இதுவாகும். இது, பரிசுத்த தேவதாயார் தமது பிறப்பைப்பற்றித் தீர்க்கதரிசனமாகவோ அன்றேல் அடையாளத்தாலோ முன்னதாகஅறிவித்திருந்த தாவீது, சலமோன், இசையாஸ் எனும் பழையஏற்பாட்டுத்தீர்க்கதரிசிகள் மூவரையும் ஒருபுறம்திலும், இந்தத் தீர்க்கதரிசனங்களையும், அடையாளங்களையும் வியாக்கியானஞ்செய்து விளக்கிய அர்ச். பேர்னுட், அர்ச். பொனுவெந்தூர், அர்ச். பெரியகிறகோரியார்எனும் திருச்சபைப் பிதாக்கள் மூவரையும் மறுபுறத்திலுங்கொண்டு, இந்தியாவின் சாதாரணமான ஓர் சமயசின்னமாகிய தாமரைப்புஷ்பம் ஒன்றிலே தியான யோகத்தில் வீற்றிருப்பதை வர்ணித்துக் காட்டுவதாகும். இதற்குச் சற்றுக்கீழே தேவமாதாவின்பத்திச்சபை அர்ச்சியசிஷ்டர்களான அர்ச். ஸ்ரனிஸ்லாஸ் கோஸ்கா, அர்ச். அலோஷியஸ் கொன்சாக்கா, போட்மோறிஸின் அர்ச். லேயோனுட், வியாகுலமாதாவின் அர்ச். கபிரியேல் எனும் நாலவரும் அமர்ந்திருக்கும் பாவனை காண்பிக்கப்பட்டிருக்கும்.

### சந்யாசரான திவ்வியகர்த்தர்

மனதைக் கவரத்தகும் மற்றோர் காட்சிப்பொருள் யாதெனில், நமது திவ்வியகர்த்தர் ஓர் சந்யாசியைப் போல் தாமரைப்பூ ஒன்றின் மீது நிற்பதாகக்காண்பிக்கும் சிவியபரிமாணமுள்ள ஓர்அழகிய திருச்சுரூபமாகும். இந்தச்சுரூபம் வத்திக்கான் பொருட்காட்சியின் மத்தியதானத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். வண. ஹெறுஸ் சுவாமியவர்கள் காட்டிக்கொடுத்தபடி, இந்தியமாதிரியாகச் செய்யப்பெற்ற ஓர் கோவிலின் பெரியமாதிரி ரூபமொன்றும் "பிளாஸ்றர் அவ் பரீஸ்" கொண்டு இராசபுதன மாதிரியாகச் செய்யப்பெற்ற ஓர்கோவிலின் மற்றோர் மாதிரி ரூபமொன்றுடன் ரோமாபுரிக்கு அனுப்பிவைக்கப்படும். இதனை அப்போஸ்தொலிக்க ஸ்தானுபதியாண்டவர் பங்களூரிலுள்ள தமது மாளிகையிலே வைத்திருந்தார்.

### இருபுராதன சித்திரங்கள்

ஏனையகாட்சிப் பொருட்களில் இந்தியமாதிரிகளிலே அழகிய சித்திரத்தையல் வேலைப்பாடுகளைக்கொண்ட திருவஸ்திரங்களும் அடங்கியிருக்கும். இந்தியாவிலுள்ள அநேக கன்னிகாமடங்களும், விசேஷமாய் மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரிய கன்னியர் மடங்களும் இந்தச் சித்திரத்தையல் வேலைகளில் ஊக்கமாக ஈடுபட்டிருக்கின்றன. வண. ஹெறுஸ் சுவாமியவர்கள் அந்தக்காலத்திலே அக்பாரின் மாளிகையில் முதல்யேசுசபைக் குருமார் சஞ்சரித்தமனையை அநேகவருடங்களுக்குமுன் பிரதிமைப்படம் பிடித்துவைத்திருந்தார். பெருப்பிக்கப்பட்ட இந்தப்பிரதிமைப் படங்களையும் சுவாமியவர்கள் அனுப்பிவைப்பார். இந்தமனை இன்றைக்கும் அழியாமல் இருந்துவருகின்றது. இந்தமனையில் காபிரியேல் தேவதூதர் தேவமாதாவுக்கு மங்களஞ்சொன்னதையும், ஏதேன் நந்தாவனத்தில் ஆதாம்ஏவாள் கட்டிக்கொண்டபாவத்தையும் வர்ணித்துக்காட்டும் மொகலாய சக்கரவர்த்திகளின் காலத்து மாதிரியாய்ச் சித்திரிக்கப்பட்ட இரு கிறீஸ்துவ புராதன சித்திரப்படங்களும் இருக்கக் கண்டறியப்பட்டன. இவைகளைப்போன்ற இரு சித்திரப்படங்களும் வத்திக்கான் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும்.

### பொருட்காட்சியின் நோக்கம்

இந்தக்காட்சிப் பொருட்களெல்லாம் இந்த ஐப்பசிமாதத்திலே ரோமாபுரியில் இருக்கவேண்டியன. அங்கு இவைகள் அனுப்பப்படுமுன் பம்பாய் நகரிலே காட்சிக்குவைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் இந்திய கிறீஸ்துவ கலையென்றால் என்ன? காட்சிக்கு என்னென்ன பொருட்கள் அனுப்பப்படுகின்றன? என்பதைக் கத்தோலிக்க மக்கள் அறியக்கூடியோரானுர்கள். இக்காட்சியின் நோக்கங்களில் ஒன்று, வேதபோதக நாடுகள்மட்டில் கத்தோலிக்கமக்களுக்குள்ள கரிசனையை விருத்திசெய்வதேயாகும். காட்சிப்பொருட்களை விற்பனைசெய்து வரும்பணம் அந்தந்த வேதபோதகநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும். பரிசுத்தவருடத்திலே ரோமாபுரியைத் தரிசிப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்ற முப்பதுலட்சம் யாத்திரிகர்களுக்கும் இந்தக்காட்சி எடுத்துககாட்டப்போவதென்ன? கத்தோலிக்க திருச்சபையானது ஒருநாட்டின் கலாசாரத்தை மற்றோர்நாட்டில் கொண்டுபோய்ப் புகுத்துவதில்லை என்பதும், அது ஒரு நாட்டுக்கு மாத்திரம் உரியதல்ல, உலகிலுள்ள சகல நாடுகளுக்குமே பொதுவானதென்பதுமே.

---

நல்லூர்மீசாம்

## செபமாலைமாதா

யாழ்ப்பாணக்குடாநாட்டின் மூன்று கோணங்களிலும நல்லூர்மீசாமுக்குச் சேர்ந்த மூன்றுகோவில்கள் உண்டு. இம்மூன்றுகோவில்களும் செபமாலை மாதாவின் நாமத்தையே கொண்டிருக்கின்றன.

**மூளாயில்**—அவ்வூர்க்கிறீஸ்தவர்கள் ஆரம்பநோவனைகளைக் கொண்டாட அயற்கிராமங்களாகிய சில்லாலை, இளவாலை, ஊர்காவற்றுறை, நாரந்தனை, காரம்பன், மாதகல்மீசாங்கள் கடைசி நோவனைகளைக்கொண்டாட, ஞாயிற்றுக்கிழமைகாலை திவ்வியபூசையுடன் திருநாள் முடிவாகும். இங்கு குருவானவர் திருநாட்கொண்டாட்டத்திற்குப் போவதற்காகச் சமையலறையும், மற்றும்அவசியமான திருத்தங்களும் செய்வதற்கென்று ஏறக்குறைய நூறு ரூபாவரையில் செலவாயிற்று. அவர்கள் அருந்திவருந்தித் தேடி வருடாவருடம் கொடுக்கும்தெட்சணைகள் இப்படியே கரைந்துபோவதைக் காண்பதுபெரிதும் மனவருத்தத்துக்கேதுவாய் இருக்கிறது.

இந்தக்கோவில் மூளாய்ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலே இருப்பதால் நோயாளிகள்அநேகர் இங்கு கோவிற்காவலுக்கு வருவதுண்டு. ஆனால், இங்கே தங்குவதற்கு ஒருமடமில்லாமையால் இவர்கள்அனுபவிக்கும் கஷ்டம்பெரிது. இவ்வூர்க்கிறீஸ்தவர்கள் பிழைப்பின்றித் தவிக்கின்றனர். இவர்களுக்கென வண. ஞானப்பிரகாசசுவாமியார் ஒருபெரியவளவு வாங்கிவிட்டிருந்தாலும் அதைப் பண்படுத்திப் பயிர்செய்து சீவியத்தைப்போக்குவதற்கு ஒருகிணறு இல்லாதது பெருங்குறைபாடாயிருக்கிறது. செபமாலை மாதாவின் பக்தர்களே! இவர்கள்மேல் இரங்கமாட்டீர்களா?

**மூலவையில்**—பலாலி, ஊறணி, மயிலிட்டிக்கிறீஸ்தவர்களும், அவ்வூர்க்கிறீஸ்தவர்களும் திருநாளுக்கு ஆயத்தமான நோவனைகள் கொண்டாடுவார்கள். ஐப்பசிமாசத்தின் 3-ம்ஞாயிறாகிய 16-ந்திகதி திருநாட்கொண்டாட்டம் நடைபெறும்.

**கச்சாயில்**—மிருசுவில், கிளாலி, கச்சாய்க்கிறீஸ்தவர்களின் உதவியோடு ஐப்பசிமாசத்தின்3-ம்ஞாயிறாகிய 16-ந்திகதி திருநாள் கொண்டாடப்படும்.

இப்படியேஇக்குடாநாட்டின்மூன்று கோணங்களிலும் செபமாலைத்தாயாருக்குப் பிரசித்தவேண்டுதல்கள் நடைபெற்றுவருவது எவ்வளவுசந்தோஷத்துக்குரியது. இந்தக்கோவில்களுக்குச் சேர்ந்தவர்களோடுகூட அருகாமையிலுள்ள கிராமங்களைச்சேர்ந்தவர்களும் ஒரேமனமாய் நல்லூர்மீசாம் கருத்துகளுக்காக இம்மாசம்முழுவதும் மன்றுடுவார்களென்பது எவ்வளவுமனத்தைரியத்தை எமக்குக்கொடுக்கின்றது. திருச்செபமாலைஇராக்கினியே எங்கள் தேசம்மனந்திரும்ப மன்றாடுவீரென்னும் விண்ணப்பத்துக்குத் தேவதாயார் செவிகொடாமல் எப்படித்தான் விடக்கூடும்!

### மாசம் ஒருரூபா

நல்லூர்மீசாம் தேவைகளுக்காக மூன்று அபிமானிகள் தங்கள் நண்பரிடம் மாசம்ஒருரூபாவீதம் சேர்த்துப் பணஞ்சேரச்சேர எமக்கு அனுப்பிவைப்பதாக எம்மிடத்தில் பத்திரம்பெற்றுள்ளார்கள். இதுவரையில்சேர்த்து அனுப்பியதொகை 37 ரூபா. இவர்களின் நன்முயற்சியை நண்பர்கள் உற்சாகப்படுத்தித் தங்கள் தெட்சணைகளை இவர்கள்மூலமாக அனுப்பிவைப்பார்களாக.

பேசாலையிலிருந்து ஓர் பேருபகாரி வெகுவியப்புக்குரியதும், பலன்நிறைந்ததும் திருச்சபைக்கு அத்தியாவசியமுமான நல்லூர்மீசாமுக்குஅனுப்பிய பேருபகாரத்துக்காக நாம்மனப்பூர்வமாகநன்றிகூறுவதுமல்லாமல் அவருக்காகஎமதுபூசையிலும் என்றும் மன்றாடிவருவோம். மேலும் அவர் எழுதுவது: "தங்களுக்குத் தேவன் தந்தஊழியம்பெரிது. தங்களுக்கு ஞானப்பிள்ளைகள் அதிகம்என்பது எமக்குவிளங்கும். தங்கள்தேவஊழியத்தோடு நாங்களும் தேவ இரட்சணியத்தைப் பரப்பத் தோளோடுதோளாய் உதவிசெய்யவேண்டும்."

இம்மீசாம்தொண்டுகளைப்பற்றி அநேகர்போதியளவு விளங்காமலிருப்பதே எமதுகஷ்டங்களுக்கு விசேஷகாரணமாய் இருக்கின்றது.

ஓடர் அனுப்புவது:

Sub–Post office,
NALLUR.

எனது விலாசம்:

Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
அர்ச். சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

## ஆயர் வெண் பொன் யூபிலி

· சிலாவத்தை

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் கீழுள்ள நொங்குவில், கரந்தாய், புலிவளைஞ்சான், அவரிக்காடு, புத்தளம், பம்பிவெட்டான், பண்டிமுப்புவா, மாம்புரி, சிலாவத்தை முதலியதோட்டங்களைச்சேர்ந்த தொழிலாளர், கங்காணிமார், கணக்கமார் யாவரும் ஒன்றுகூடி, தோட்டங்களெல்லாவற்றிற்குந் தாயகமாகிய முல்லைத்தீவு, அர்ச். இசிதோர் தோட்டத்தில், தோட்டக்காரரின் பாதுகாவலராம் அர்ச். இசிதோர் திருநாளுடன் சென்ற புரட்டாசிமாதம் 18-ந்திகதி ஞாயிறுவாரம் காலை 10 மணிவளவில் நம்ஆயர் மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவரவர்களின்வெண்பொன்யூபிலி விழாவையும் கொண்டாடினர். திருநாள் வைபவங்கள் முடிந்ததும் விழாக்கொண்டாட்டத்துக்கென நவமாய்இயற்றிச் சிங்காரிக்கப்பட்டிருந்த அழகிய பந்தரில் வாத்தியவரிசைகளுடன் நமது ஆயரை அழைத்து வந்து நடுவிடத் தமரச்செய்யவே, சிலாவத்தையில்சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகக் கணக்கராகக் கடமையாற்றியிருந்த திரு. ச. அந்தோனிப்பிள்ளையவர்கள் மாலைசூட்ட, பாலியர் இனியகீதங்கள்படிக்க, தற்போது கணக்கராய்க் கடமைபார்க்கும் திரு. ஏ. வீ. பீலிக்ஸ் அவர்கள் வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். ஒவ்வொரு தோட்டத்துக் கணக்கர்மாரும் தத்தம் பொற்கிழிகளை வழங்கினர். மகாவந். ஆயரவர்கள் நன்றிகூறி ஆசீர்வாதம் ஈந்தனர். இவையெல்லாம் தோட்டங்கள் யாவற்றுக்கும் மேற்பார்வையாளரான வண. பி. எஸ். சூசைநாதர்சுவாமியவர்களின் கண்ணியமிக்க ஒத்துழைப்பால் நனிசித்திபெற்றதென யாவரும்பாராட்டினர்.

கண்டுகளித்தோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசப்பரப்புதல் ஞாயிறு 23-10-49

## மேன்மை தங்கிய கோன்ஸ்தாந்தினி ஆண்டவர் அவர்களின் திருமுகம்

"எங்களைத் திட்டுகிருர்கள், நாங்கள் ஆசீர் கூறுகிறோம்"
(I. கொரி. IV 2.)

ஆபிரிக்காவிலே அப்போஸ்தலத்துவ தொண்டு துரிதமாகவும், திறம்படவும் நடைபெற்றுவருகிறது. அறுவடையும் பெருகிக்கொண்டிருக்கிறது. எவ்விடத்திலும் கல்விப்பயிற்சியும், பரோபகார அலுவல்களும் செழித்தோங்குகின்றன. முக்கியமாய்க் குருத்துவமடங்கள் சிறப்புடன் விளங்குகின்றன பிற்காலவிருத்திக்கு இஃது ஓர் சான்ருகும்.

இந்தியாவிலே வெகுகாலமாக நடைபெற்ற கிறீஸ்துவ அப்போஸ்தலத்துவத்தின்கனி பழுத்துப் பலன்கொடுக்கிறது. பிறதேச வேதபோதகர்கள் செய்ததொண்டு இப்போது இந்தியருக்கே ஒப்படைக்கப்படுகிறது. பிறதேசகுருமார் இந்தியமேற்றிராணிமார்களுக்கு உதவிபுரிகிருர்கள். இது பெருமகிழ்ச்சிக்குரிய செயல். இதைப்பற்றி, அர்ச். அருளப்பர் (IV. 36) சொல்லுகிறவண்ணம், "விதைக்கிறவனும் அறுக்கிறவனும்" ஒன்றுகூடி ஆனந்தங்கொள்ளலாம். பிறதேசகுருவானவரும் சுதேச குருவானவரும் ஒரேஆனந்தத்தில்பங்குபெறுகிருர்கள்.

கீழ்நாட்டின் சிலபிராந்தியங்களில், சுரங்ககாலத்துத்திருச்சபை துன்புற்றவண்ணம் வேதபோதகசபை இக்கட்டுக்குள்ளாகி இன்னற்படுகிறது. அலைக்கழிக்கப்பட்ட அந்தப்பகுதிகளிலிருந்து அபயசத்தம் கிளம்புகிறது. அங்குள்ள விசுவாசக்குரல் ஞானஉதவியும், பொருள்உதவியும் கேட்கிறது. கிறீஸ்துநாதரின் ஞானஉடல் துன்புறுகிறது. அவ்வுடலின் அவயவங்களெல்லாம் கீழ்ப்பட்டால் மற்றஅவயவங்களெல்லாம் அதைஉணர்கின்றன. எக்காலத்திலும்பார்க்க இக்காலத்தில் நம்மவருள் கிறீஸ்துவஒருமைப்பாடு உயிருள்ளதாயிருக்கவேண்டும். செபத்தினலும், நன்கொடையாலும், விசுவாசப்பரப்புதல்சபையின் அங்கத்தவர் ஆவதினலும் சுவிசேஷ போதகர்களுக்கு உதவிபுரியவேண்டும்.

"எங்களைத்திட்டுகிருர்கள். நாங்கள் ஆசீர்கூறுகிறோம்." (I. கொரி. IV 12) "துன்பங்களில்முதலாய் மேன்மைபாராட்டுகிறோம்" (உரோ. V.3)என்று அர்ச் சின்னப்பர் சொன்னமொழிகள் நமதுவேதபோதக குருக்களிடம்நிறைவேறுகின்றன. வயதுமுதிர்ந்த மேற்றிராணியார்ஒருவர் சொல்வதைக் கேளுங்கள்: "எங்கள்கதி என்னவாகுமென்றுவது, எங்கள்முயற்சிகளின் முடிவு எப்படி இருக்குமோவென்றுவது சொல்லமுடியாது. நாம் கடவுளின் திருக்கரங்களில்இருக்கிறோம். வேதசாட்சியின்முடி பலருக்குக் கிடைக்கக்கூடுமென்று ஒப்புக்கொள்ளுகிறோம் அந்தவரம் எமக்குக்கிடைக்குமாகில் பரலோகத்தில்இருக்கும்போது விசுவாசப்பரப்புதல்சபையை நடத்துகிறவர்களுக்காகவும், அதன்உபகாரிகளுக்காகவும், உங்கள்எல்லோருக்காகவும் வேண்டிக்கொள்வோமென்று உறுதியாய்க்கூறுகிறோம்."

வேறொரு மேற்றிராணியார் சொல்வது: "இதுவரை, எங்கள்மேற்றிராசனத்தின் ஓர்பகுதியில் அமைதிஇருந்தது. இப்போது அப்பகுதி எதிரியின் கையில் அகப்பட்டுக்கொண்டது. துன்பப்படுகிற எமதுமக்கள்மட்டில் தேவபராமரிப்பின் இரக்கம் பொழிவதாக.—கடவுள் நமதுநல்லதந்தை. என்னதான் நேர்ந்தாலும், அவர்பொருட்டு, நாம் படும் துன்பத்துக்குச் சன்மானம்இல்லாமற்போகாது. எக்காலத்திலும் நமதுஆண்டவருக்குப்புகழ்ச்சி! தொடக்கத்திலிருந்தே குருமார் தங்கள்விடுதிக்குவெளியே கிளம்பவழியில்லை. விசுவாசிகளோடு எவ்விததொடர்பும் இல்லாதொழிந்தது. பின்னர் தங்கள் விடுதியிலிருந்தும் துரத்தப்பட்டுச் சிறைகளில் தள்ளுண்டு, இறுதியாய் எல்லைக்குப்புறம்பேயும் விரட்டப்பட்டார்கள். சிறைவாசக்கொடுமையால் இறந்தவர்கள்சிலர். குரூரவாதனைகளினிமித்தம் சுதேசகுருவானவர்ஒருவர் வேதசாட்சியாக உயிர்துறந்தார். குருத்துவமாணவர் அங்கும்இங்கும் ஓடிப்போகவேண்டியதாயிற்று. ஆனுல், அவர்கள் எல்லாரும், விசுவாசத்தை மறுதலிக்கும்படி தங்களுக்குச்செய்யப்பட்ட சோதனைகளைச்செயித்து உறுதியாய் இருக்கிருர்கள். சுதேசகுருமாரில் சிலர் இரகசியமாய் இன்னும்தங்கள் ஞானஅலுவலைச் செய்துவருகிருர்கள். குருமாரின்விடுதிகள் 40. அவற்றில் ஆறு நெருப்புக்கு இரையாக்கப்பட்டன. 31 விடுதிகளில் சுவர்கள்மாத்திரம் இருக்கின்றன. கோவிற்பொருட்கள்யாவும் களவாடப்பட்டன. புத்தகங்கள் பத்திரங்கள்எல்லாம் இழந்துபோனேம். ஓடிப்போனவர்களின் பிழைப்பு மகாபரிதாபத்துக்குரியது. கடவுளுடைய தயவும், நல்லநிலைமையில்இருக்கிற சகோதரர்களின் உதவியுமே எங்களுக்குநம்பிக்கை. இந்தப் புயல்அடங்கி எங்கள்வேலையை மீண்டும்செய்யவும்,பாழாய்ப்போனவற்றைத் திரும்பஅமைக்கவும் கடவுளின் இரக்கத்தை எங்கள்செபங்களிலும், உபவாசங்களிலும் இடைவிடாது இரந்துமன்றுடுகிறோம்.

இன்னும் ஓர்மேற்றிராணியார் எழுதுவது:—எங்களால்கூடுமானபரியந்தம குருமாரும்,கன்னியாஸ்திரிமாருமாகிய நாம் எமக்குக்குறிக்கப்பட்டஇடத்தில் இருப்போம். ஏனெனில், இது வேபரிசுத்தஸ்தானத்தின் விருப்பம். ஆதலால், தேவசித்தம். மேற்றிராசனம் முழுவதும் எதிரிகள்வசம் இருக்கிறது. அவர்கள் சனங்களிடமிருந்து எல்லாவற்றையும் பறித்துக்கொள்ளுகிருர்கள். குருமார்எட்டுப்பேர் எதிரிகளால்அனுபவிக்கிற இடைஞ்சல்கள்கொஞ்சமல்ல. வாலிபசுதேச குருவானவர்ஒருவர் சிலவாரங்களுக்குமுன் எதிரிவசமுள்ளபகுதியில் தியானப்பிரசங்கங்கள் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் பூசைநேரத்தில் வசீகரவேளையாகும்போது திடீரென எதிரிகள்அவரைப்பிடித்துத் தலைவரிடம் இழுத்துக்கொண்டுபோய் அவர்தேசத்துரோகி, சதிகாரன்என்று குற்றஞ்சாட்டினர்கள். ஆனுல், அவரோ தாம்அத்தகைய குற்றவாளியல்லஎன்று தெளிவுபடஎடுத்துக்காட்டி விடுதலை அடைந்தார். ரோமையிலுள்ள குருமாரும், கன்னியாஸ்திரிமாரும், குருத்துவமாணவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மூன்று மேற்றிராணிமார்களின் மொழிகளை எடுத்துக்காட்டியிருக்கிறோம். அந்தப்பிராந்தியங்களில் நடைபெறுகிற அக்கிரமங்கள், அட்டூழியங்கள், கொலை, களவுகள், மற்றுமுண்டாயிருக்கும் கஷ்டநஷ்டங்களையெல்லாம் விபரமாய்க் கூறுவதற்கு இத்திருமுகம் இடந்தராது. மாம்சம பலவீனமுள்ளதாயினும், மனமானது திடனுயிருக்கிறது. குரூரமான இந்தவேதகலாபனைஇருளிலே, ஞானஒளி சொலிக்கிறது. குரோதம் அல்லது அதைரியமுள்ள ஒருவார்த்தையேனும் நமக்கு எட்டவில்லை. இரக்கம்சொரிந்த மொழிகள்தான் அப்பிராந்தியங்களிலிருந்து வருகின்றன. நாங்கள் இகழப்படுகிறோம், ஆசீர்கூறுகிறோம். நமதுகாரியாலயம் இயற்கையானகாரியங்களை மட்டுமன்றி, இயற்கைக்கு மேற்பட்ட காரியங்களையும் இடைவிடாது அறியவருகின்றது.

திருச்சபை துன்பப்படுகிறது, செபிக்கிறது, நம்பிக்கையாயிருக்கிறது, எதிர்க்கிறது. சுதேசமேற்றிராணியார்ஒருவர் தமதுமந்தையின்மத்தியில் இருப்பதற்காக ஓர்வகைப் பாற்கட்டிவிற்கும் சில்லறைவியாபாரியாகக்காலந்தள்ளுகிருர். மற்றவர்கள் பலவகைப்பட்ட தொழில்கள்செய்கிருர்கள். ஒருவர் புகைப்படம் பிடிக்கிருர். வேறொருவர் நாவிதன் வேலைசெய்கிருர். இரவிலே மறைவான இடந்தேடி அங்குசனங்களைக் கூட்டிச்சேர்த்து அவர்களுக்குத் தேவதிரவியனுமானங்கள் அளிக்கிருர்கள். பரிசுத்ததந்தை 12-ம்பத்திநாதபாப்பரசர் வேதபோதக குருக்கள்மட்டில் பெரிதும் அனுதாபம்உள்ளவர். திவ்வியபூசைப்பலி நிறைவேற்றுகிறவிஷயமாய் அவர்களுக்கு விசேஷித்த உத்தரவுகள் அளித்திருக்கிருர். சுரங்கசபையின்காலம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

நமதுவேதபோதகர்களின் விண்ணப்பங்களை உங்களுக்குத் தெரிவித்தல் எனதுகடமையும், பாக்கியமுமாகும். நமதுஉதவி அவர்களுக்கு எக்காலத்திலும்பார்க்க இப்போதுதான் அதிகஅவசியம். குருமாரின்வேதபோதகஜக்கியத்தை உற்றுநோக்கி விசுவாசப்பரப்புதல்சபைபோரால் மேற்றிராணிமாருக்கும், வேதபோதகநாடுகளுக்கும் உதவிபுரிவதற்காகஏற்பட்டசபைகளின் நிர்வாககுருமாருக்கும் உபசாரங்கூறுகிறோம். வேதபோதக குருமார் யாவரேயாலும் அவர்களுக்கும், கிறீஸ்துவர்கள்எல்லாருக்கும், செபத்தாலும் நன்கொடையாலும் அவர்கள் செய்துள்ள உதவிக்காக எம்மனமார்ந்தநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## அதிசய பனைமரங்கள்

கடலுக்கடியில்வளரும் அதிசய மாமொன்றின்பழமென அநேக நூற்றாண்டுகளாக இந்தியமக்களும், மாலைதீவுவாசிகளும் நினைத்துவந்த அபூர்வகனியொன்று தற்போது பிரித்தானியில் நடைபெறும் கண்காட்சியொன்றில் இடம்பெற்றுள்ளது. உண்மையில் இக்கனி சிசிலீஸ்என்றபனையின் வித்தேயாகும். இந்துமகாசமுத்திரத்திலுள்ள தீவுக்கூட்டங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்புவரையில் இப்பழம் எங்கிருந்துவருகிறதென்பது எவருக்கும் தெரியாது. அலைகளால்அடித்துவரப்பட்டுக் கடற்கரைகளில் ஒதுக்கப்பட்டுவந்த இப்பழத்தை இந்தியமக்கள் கடலுக்கடியில்வளரும் அதிசயமரத்தின் கனியெனநினைத்து வந்தனர். ஐரோப்பியவர்த்தகர்கள் இதைக் கடலில்விளையும் கொக்கோஎன அழைத்துவந்தனர். இவ்வரியபனையின்பிஞ்சு காயாகிப்பழுப்பதற்கு ஏழுவருடங்கள் பிடிக்கின்றன. இப்பழத்திற்கு ஒளஷதகுணங்கள் இருக்கின்றன. ரோமானிய சாம்பிராச்சியத்தின் சக்கரவர்த்தியாக இருந்த இரண்டாம்றூடால்ப்அரசரால் வெள்ளிப்பேழையில்வைத்துப் பாதுகாக்கப்பட்டுவந்த இக்கனியொன்றுதான் பிரித்தானிய கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. அபூர்வபொருள்களைச்சேமிப்பதில் அதிகஆர்வங்கொண்டிருந்த இச்சக்கரவர்த்தி இப்பழத்தை 4,000 கில்டர்நாணயங்கொடுத்து டச்சு அட்மிறல்ஒருவரிடம் வாங்கியதாகக் கூறப்படுகிறது. இவ்விசேஷ பனைமரங்கள் இந்துமகாசமுத்திரத்திலுள்ள பிருபிளின் தீவில்மட்டும் வளர்கின்றன. வேறுஎங்கும் வளர்வதில்லை. இப்பனைமரம் செங்குத்தாக 100 முதல் 120 அடிஉயரம்வரை வளருகிறது. இப்பனை காய்த்துப் பருவமடைவதற்கு 100வருடங்கள் பிடிக்கின்றன. இப்பனம்பழத்தின்நிறை சாதாரணமாக 30 முதல் 40 இருத்தல் வரையிலாகும். இது காயாகஇருக்கும்போது இதில் ருசியுள்ள வெள்ளைநிறச்சாறு நிரம்பியிருக்கிறது. பிருபிளின்தீவிலுள்ள இந்த அபூர்வபனைகள் அரசாங்கசட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. தற்போதுபழங்கள் இந்துமகாசமுத்திர நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன.

## விசித்திரமான சீவராசிகள்

உலகத்திலுள்ள சமுத்திரங்களுக்கடியில் மறைந்துகிடக்கும் எரிபொருள் வளத்தையும், உணவுப்பொருள்வளத்தையும் ஆராய்வதற்காக அமெரிக்காவில் ஓர்பெரும்முயற்சி ஆரம்பமாயிருக்கிறது. இந்த ஆராய்ச்சி தென்கலிபோணிய சர்வகலாசாலையைச் சேர்ந்த அல்லன் ஹன்கோக் விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகத்தின் ஆதரவில்நடைபெறுகிறது. கடல்ஆராய்ச்சியில் நல்ல அனுபவமுள்ள திரு. ஓட்ரிஸ் பேட்ரன் என்பவர் இந்தஆராய்ச்சிவேலைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர். கடல்களுக்கடியில் மறைந்துகிடக்கும் இயற்கைவளங்களைப்பற்றிமேல்ஆராய்ச்சிக்கு வழிசெய்வதற்கும், அதற்கானகருவிகளைப் பரிசோதிப்பதற்கும் இவர்சமீபத்தில் கடலுள் வெகுதூரம்சென்றுர். அவ்வளவுஆழத்துக்கு இதுவரை உலகத்திலேவேறெவரும் சென்றதேயில்லை. கடலின்ஆழத்தை அளக்கும்படியாக இவரும், டக்றர்பீப்என்பவரும்சேர்ந்து ஒருநூதனகருவியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். அதைசுற்றிலும் மிகக்கெட்டியான ஓர்உருக்குத்தகடுபோடப்பட்டிருக்கிறது. பந்துபோல்தோன்றும் அக்கருவியின்பெயர் "பெந்தோஸ்பியர்"என்பதாம். 10,000 அடி ஆழத்தில் கடலின் அழுத்தத்தை எதிர்த்துநிற்கும்வகையில் இதுசெய்யப்பட்டிருக்கிறது. இக்கருவிகொண்டு ஆராய்ச்சிசெய்ததில் "கடலின்கீழ் 4,500 அடி ஆழத்தில் நட்சத்திரங்களைப்போல்மின்னும்விசித்திரமான பிராணிகள்வாழும் ஒரு அமானுஷ்யமான உலகமிருக்கின்றது. அந்தஉலகத்தில் குளிர்அதிகம். அங்குள்ள பளபளப்பாகமின்னும் சீவராசிகளிற்சில உருவத்தில் பாம்புபோல் இருக்கின்றன. வேறுசில வெளிச்சந்தரும் மீன்களாயிருக்கின்றன. மற்றுஞ்சில வட்டவடிவமாக இராமல் மீன்களைப்போல் தோன்றுகின்றன" என்று பேட்ரன் கூறுகிருர்.

கலிபோணியகடற்கரைக்கப்பாலுள்ள பசிபிக்சமுத்திரத்திலே இவர்சமீபத்தில் 4,500 அடி ஆழத்துக்குச் சென்றுர். இதற்குமுன் இவ்வளவுஆழத்துக்கு உலகத்தில் வேறெவரும் மூழ்கியதே கிடையாது.1934-ம்ஆண்டுபேர்மியூடா தீவுக்கருகில் திரு. பேட்ரனும் டக்றர் வில்லியம்பீப்என்னும் இயற்கைசாஸ்திரியும்சேர்ந்து 3,028அடி ஆழத்துக்குச் சென்றுர்கள். ஆனுல் இப்பொழுது இருவரும்சேர்ந்துசென்ற அந்தஆழத்துக்குமேல் 1,472 அடி தூரம் திரு. பேட்ரன் தன்னந்தனியாகச்சென்றிருக்கிருர். ஆனுல், இந்தமுறை 6,000 அடி ஆழத்துக்குப்போகமுடியுமென்று அவர்நம்பியிருந்தார். ஆனுல் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்ததாலும்—"பெந்தோஸ்பிய"ரிலுள்ள மின்சார விளக்குகள் அணைந்துவிட்டதனுலும் அவரை 4,500 அடிஆழத்திலிருந்து மேலேஇழுக்க வேண்டியதாயிற்று.

பெந்தோஸ்பியர்கருவியிலுள்ள மின்சாரவிளக்குகள் 4,100 அடிஆழத்தில் அணைந்துவிட்டபடியால் அவரால்படம் பிடிக்க முடியவில்லை. எனினும் பல நூறுஅடி ஆழத்துக்கு அவர்மையிருட்டிலே சென்றிருக்கிருர். ஆனுல் நட்சத்திரங்களைப்போல் மின்னும்பிராணிகள் சிறிதுவெளிச்சம் தந்தனவென்று கூறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோபதேசப் பரீட்சை, 1949.

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

கீழே கேட்கப்படும் விபரங்களைக் காலந் தாழ்த்தாது அனுப்பிவைக்கும்படி நமது கத்தோலிக்க பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1. பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள பிள்ளைகளின் தொகை.
2. ஞானோபதேசப் பரீட்சை A திட்டத்தின்படியோ அன்றேல் B திட்டத்தின்படியோ எனத் தெரிவித்தல்.
3. S. S. C. மாணவர்கள் பின்பற்றுவது அரசினர் பாடத்திட்டமோ அல்லது மேற்றிராசன பாடத்திட்டமோ?

கடித உறையின் இடது மேற்பக்கத்தில் "ஞானோபதேசப்பரீட்சை" என்று குறிப்பிட்டு இவ்விபரங்களைக் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரர், மேற்றிராசனமாளிகை, யாழ்ப்பாணம் என்று விலாசமிட்டு இம்மாதம் 15-ம் திகதிக்குமுன் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

G. A. GURUSAMY, O. M. I.
கத். பாடசாலைகளின்
பொது முகாமைக்காரர்.

Bishop's House,
Jaffna, 5-10-49.

## திருநாள் அட்டவணை

**1949-ம் ஆண்டு ஐப்பசி மாசம்**

| | | |
|---|---|---|
| வெ | 7 | தேவமாதாவின் திருச்செபமாலைத்திருநாள் |
| சனி | 8 | அர்ச். விறிசித்தம்மாள், வி. |
| ஞா | 9 | இஸ்பி. ஆகமனத். பின்வரும் 18-ம் ஞாயிறு—அர்ச். தியோனிசியார், மே, வே.—அர்ச். லெயோநாட் [கு. |
| திங் | 10 | அர்ச். பிரான்சீஸ்கு பார்சியார், |
| செ | 11 | தேவதாயாரின் மாதாமகிமைத் திருநாள் |
| புத | 12 | அர்ச். வல்பிறித்தப்பர், மே. |
| வி | 13 | அர்ச். எட்வாட், இ. |

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
ஐப்பசி மாசம் 6-ந் திகதி

## குடிசைக் கைத்தொழில்

எமது நாட்டில் ஓர்காலம் விருத்திபெற்றிருந்து பலவழியாலும் சனங்களுக்குப் பணவருவாயைத் தந்துகொண்டிருந்த குடிசைக்கைத்தொழில்கள் காலகதியில் அருகிவந்து அதுகாரணமாகப் பொருளாதாரவளம் குன்றிப்போய்விட்டது. நூல்நூற்றல், பனங்கட்டிசெய்தல், தும்புதிரித்தல், பாய் கடகம் பெட்டி இழைத்தல், நெசவுசெய்தல் ஆதியாம் குடிசைக் கைத்தொழில்கள் அக்காலத்திலே பிழைப்புக்குரிய தொழில்களாய் மாத்திரமல்ல, மதிப்புக்குரிய தொழில்களாயும் கருதப்பட்டுப் பரக்க நடைபெற்றுவந்தன. யாழ்ப்பாணத்திலே பிரஸ்தாபம் பெற்றிருந்த ஓர்பிரதமவித்தியாதரிசியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்நாளிலே பனங்கட்டிசெய்வதில் அதிகமாக ஈடுபட்டுப் பிழைத்துவந்ததை நாம் அறிவோம். ஆனால், அவர்களுக்குப்பின் அந்தஊரிலே இந்தக்கைத்தொழில் முற்றாக நின்றுபோய்விட்டது. இப்படியாக ஊர்கள்தோறும் கைத்தொழில்கள்பல கைவிடப்பட்டமையால் நாட்டின் செல்வவளம் குறைவதாயிற்று. இலங்கையின்—விசேஷமாக யாழ்ப்பாணத்தின் இன்றையநிலைமையிலே குடிசைக்கைத்தொழில்கள் மீட்டும் தலையெடுக்கவேண்டியது அவசியம். ஏனெனில், தற்போது நாடுமுழுவதும் அதிகரித்திருக்கும் பிழைப்பில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க அஃது ஓர் சிறந்த ஏதுவாகும். எத்தனையோபேர்களின் வீண்காலப்போக்கை நிறுத்திவைக்க அத்தாலே வழிஏற்படும். நாள்தோறும், வாரந்தோறும், மாசந்தோறும் பணவருவாயை அது தந்துகொண்டிருக்கும். திருவிதாங்கூர்ப்புகையிலை வியாபாரம் திண்டாடிக்கொண்டிருக்கின்ற— சிங்கப்பூர் உத்தியோகம் நின்றிருக்கின்ற—கற்றவாலிபர்கள் பலரும் உத்தியோகம் கிடையாமல் உலைந்துகொண்டிருக்கின்ற— பணக்கஷ்டம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற —யுத்தம்முடிந்து இத்தனை வருடங்கள்சென்றும் வாழ்க்கைச் செலவு இன்னமும்குறையாதிருக்கின்ற இக்காலத்திலே நமது பொருளாதார நிலைமையைச் சமாளிக்க வேண்டுமானல், பல்வேறு தொழில்களிலும் நாம் அதிகமாய் ஈடுபடவேண்டும். இவற்றிலே குடிசைக் கைத்தொழிலும் குறைந்ததன்று. இந்தக்கைத்தொழிலின் முக்கியத்துவத்தை இந்திய அரசாங்கம் நன்குணர்ந்து, அத்தொழில் விருத்தியிலே பிரஸ்தாபம் பெற்ற யப்பானியகுடிசைக்கைத்தொழில் விருத்திமுறைகளைப் பின்பற்றி இந்தியாவிலும் அத்தொழிலை விருத்திசெய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சிபாரிசுசெய்யும்படி யப்பானுக்கு அனுப்பிவைத்த இருவரும் அங்கே தமது அலுவலைமுடித்துக்கொண்டு இந்தியாவுக்குத்திரும்பியிருக்கின்றனர். இவர்கள் அங்கே நூறுவிதமான குடிசைக் கைத்தொழில்களையும், வீட்டுத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டுப் பரிசோதனை செய்ததின் விளைவாய், யப்பானிய முறையிலே இந்தியா தனது குடிசைக் கைத்தொழில்களையும், மற்றும் சிறுகைத்தொழில்களையும் ஸ்தாபித்துநடத்துமானல் மிகுந்த ஆதாயம் கிடைக்குமென்றும், குறைந்தசெலவில் சிறந்தசாமான்களைச் செய்துமுடிப்பதே யப்பானியமுறையின் சிறப்பென்றும், ஊசி, பொம்மை, மூங்கில் சாமான், உணவுப்பொருள் உற்பத்திசெய்தலாதியாம் நாற்பது விதமானகுடிசைக்கைத்தொழில்களை இந்தியாவில்விருத்திசெய்ய வேண்டுமென்றும், குடிசைக் கைத்தொழில்களில்பயிற்சியளிக்கும் பொருட்டு யப்பானியநிபுணர்கள் வரவழைக்கப்படவேண்டுமென்றும் அறிக்கையிட்டிருக்கின்றனர். நமது அரசினரும் குடிசைக் கைத்தொழில்களை விருத்திசெய்வதில் விசேஷ கரிசனையெடுத்து உள்ளகைத்தொழில்களுக்குப் புத்துயிர் கொடுத்து ஊக்கமளித்தும், புதிய கைத்தொழில்களை நவமாகப் பயிற்றியும்வருவார்களால்—குடிசையெல்லாம் குடிசைக்கைத்தொழில்களால் தேங்குமானல் அப்போது அவைகள் வறுமைப்பிணி நீங்கிச் செல்வச்சிறப்பெய்துங்காலம் தூரத்திலல்லவென்றே உறுதிகூறலாம்.

## இஸ்பிரித். திரு. பின்வரும் 18-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(மத். 9: 1—8)

அக்காலத்தில் யேசுநாதர்படகேறி மறுபடியும்கடலைக்கடந்து தமது பட்டணத்துக்குவந்தார். அப்பொழுது ஓர்கட்டிலின்மேற் கிடந்த திமிர்வாதக்காரன் ஒருவனை அவர் சமுகத்தில் கொண்டுவந்தார்கள். யேசுநாதர் அவர்களுடைய விசுவாசத்தைப்பார்த்துத் திமிர்வாதக்காரனைநோக்கி: நம்பிக்கையாயிரு மகனே, உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டனஎன்று திருவுளம்பற்றினார். உடனே வேதபாரகரிற் சிலர்: இவன் தேவதூஷணஞ் சொல்லுகிருனென்று தங்களுள்ளத்திற் சொல்லிக்கொண்டார்கள். யேசுநாதர் அவர்களுடைய நினைவுகளை அறிந்துகொண்டு திருவுளம்பற்றினதாவது: நீங்கள் உங்கள் இருதயங்களில் தின்மைகளை நினைப்பதென்ன? எது அதிகஎளிது? உன்பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டனவென்பதோ? அல்லது நீ எழுந்து நடவென்பதோ? ஆயினும் மனுமகன் பூவுலகிற் பாவங்களைப் பொறுக்க அதிகாரமுடையவராயிருக்கிறார் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படியாக என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் கட்டிலை எடுத்துக்கொண்டு உன்வீட்டுக்குப்போ என்றார். அவனும் அவ்விதமே எழுந்து தன் வீட்டுக்குப் போனன். இதைக்கண்ட சனங்களோவென்றால் திடுக்கிட்டதுமன்றி மனிதருக்கு இத்தன்மையானவல்லமையைத்தந்தருளின சர்வேசுரனையுந் தோத்திரித்தார்கள். கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

### புதிய நீதியாசர்

சுப்பிறீங்கோட்டு நீதியாசர்களில் ஒருவராக நியமனஞ் செய்யப்பெற்றிருப்பவரான சங். எம். எவ். எஸ். பிள்ளை, கே. சி. அவர்கள் கொழும்பிலே இன்று சத்தியப் பிரமாணஞ்செய்து தமது புதிய உத்தியோக பதவியைக் கையேற்றிருக்கின்றார்.

### அபாயகரமான கத்திகள்

அபாயகரமான கத்திகள்பற்றிய திருத்த சட்டம் இம்மாதம் 1-ந் திகதியுடன் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அபாயகரமான கத்திகளைக்கொண்டு செல்வார்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல் பொலிஸ்ஸ்ரேஷன்களுக்கெல்லாம் கட்டளைவிடுத்திருக்கிறார். புதிய திருத்தசட்டத்தின்படி கத்திகளின்அலகு இரண்டு அங்குலநீளமுடையதாய் இருக்கப்படாது. அதாவது இரண்டு அங்குலத்துக்கு மேல் நீளமான அலகுகளைக்கொண்ட கத்திகள் அபாயகரமானவையென்று கொள்ளப்படும். இந்தக் கத்திகளைக் கொண்டு செல்லுகிறவர்களுக்கு முதன்முறை 50 ரூபாவும், அதற்குமேற்படும் ஒவ்வோர் முறையும் 500 ரூபாவும் அபராதம் விதிக்க நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. கண்டபடியெல்லாம் கத்திகளைப் பாவிக்கும் வழக்கம் அதிகரித்துவருவதாலே இந்த அபாயத்தை ஒழிப்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாகப் பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல் தெரிவிக்கின்றார்.

## பரிசுத்த பத்திமாமாதா கடைசிக் காட்சியளித்த 32-ம் வருட ஞாபகதினம்

இம்மாதம் 13-ம் திகதி பண்டத்தரிப்புப் பத்திமா ஆலயத்தில், காலை 7 மணிக்குப் பாடற் பூசையும், சாயந்தரம் அரசிவரத்தடியில் செபமாலையும், ஆலயத்தில் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும் நடைபெறும்.

### தனிப்பட்டமுறையில் தபால்கள்

மல்லாகம், அளவெட்டி, உரும்பராய் எனும் கிராமங்களிலுள்ள உபதபாற்கந்தோர்கள் இந்த ஐப்பசிமாதம் 1-ந் திகதி தொடக்கம் தனிப்பட்டமுறையிலே தபால்களை நேரே ஏற்று உதவியும் அனுப்பியும் வரும் கந்தோர்களாகக் கடமைபார்த்து வருகின்றன. அதனுல் மல்லாகம், அளவெட்டி, உரும்பராய் எனும் கிராமங்களுக்கு அனுப்பப்படும் சகல தபால்களும் அந்தந்த இடங்களின் நாமத்தைக்கொண்டதாய் இருக்கவேண்டும். அவற்றின் கீழ் சுன்னுகம்என்று கீழே எழுதுவதை நிறுத்திவிடவேண்டும். சுன்னுகமென்று கீழே எழுதினுல் தபால் போய்ச்சேர ஒருநாள் தாமதமேற்படும்.

### பழையவருடப் புகையிலை

வவுனியா வடக்குப் பிரிவிலுள்ள புகையிலைச் செய்கைக்காரர் சென்றவருடம் செய்கைபண்ணிய புகையிலையில் பெருந்தொகையான பகுதி இன்னுமே விலைப்படாமையால் இவ்வருடம் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இலங்கையின் மறுபகுதிகளிலே பீடிகள், சிகறெற்றுகளின் பாவனை அதிகரித்திருக்கும் காரணமாகப் புகையிலைக்குண்டான தேவை குறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. முல்லைத்தீவு—வவுனியா டிஸ்திறிக்கின் ஏனைய பகுதிகளிலுள்ள புகையிலைச் செய்கைக்காரரும் அதே கஷ்டம் அனுபவிக்கின்றார்களாம்.

❁ கீர்த்திபெற்ற எழுத்தாளரான ஜோர்ஜ் பேர்ணாட் ஷா வுக்கு ... 

❁ கீர்த்திபெற்ற எழுத்தாளரான ஜெசிற்ரு போவ்ஸ்ன னும்மாது சமீபத்திலே ருஷியசர்வாதிகாரியான ஸ்ராலினைச்சந்தித்து, ருஷியா ஐரோப்பாவில் மற்றோர்யுத்தத்தைக் கிளப்பிவிடுமோவென்றுகேட்டதற்கு, அவர் மறுமொழியாகச் சைபீரியாவின் ஸ்ரெப்ஸ் வெளிமுதல் கோக்கேசஸ்ஈறுகக் கொக்கோவாதவிர மற்றெல்லாம் உற்பத்திசெய்யப்படுகின்றன; இந்தக்கொக்கோவாவுக்காக யுத்தத்தில்இறங்குவது நீதியாகுமோஎன்று பகட்டாகக்கூறினராம்.

❁ கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள கருதினல்மாரின்தொகையை நூற்றுக்கு ஐம்பதுவீதம் அதிகமாக்கப் பரிசுத்தபாப்பரசர் தீர்மானித்துள்ளாரென வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. அடுத்த பரிசுத்த வருடத்திலே ஆக்கப்படவிருக்கும் புதியகருதினல்மார்களில் இந்தியாவிலுள்ள குருசிரேஷ்டர்ஒருவரும்அடங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியோதய நாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியதும், விநோதமான சமூக ஆசாரங்களைப் புகுத்தியதும், யப்பானின் புராணங்களும், ஷின்ரோயிஸக் கோட்பாடுகளுமே. யப்பானியகொற்றவனின் குடைநிழலில் குவலயம் அனைத்தும் தலைபணியவேண்டும்என்ற துடிப்பில், சிற்சிலசமயங்களில் யப்பானியன் மதியிழந்தவனுகக் காணப்படுகின்ருன்.

இத்தகையநாட்டை மேலைநாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமை பிரபலவெனீஸ்நகர யாத்திரிகராகிய மார்க்கோ போலோவைச்சாரும். "யப்பானில் வீடுகள்யாவும் தங்கஓடுகளினுல் மூடப்பட்டுள்ளன. தூண்களும், தரையில்பதித்தகற்களும் கூடப் பத்தரைமாற்றுத் தங்கத்தால் ஆனவை" என இவர்எழுதி வைத்தார். இதையறிந்த மேலைநாட்டுவணிகர் யப்பானுடன் வர்த்தகத் தொடர்புகொள்ள முயன்றனர்.

### 1549-ம்ஆண்டு ஆவணி 15

1542-இல் யப்பானைநோக்கிச் சென்ற ஒருபோர்த்துக்கேயகப்பல் புயலினுல் சிதைவுண்டது. ஏழுவருடங்களுக்குப்பின், அதாவது சரியாக 400 ஆண்டுகளுக்கு முன் 1549-ம்வருடம் ஆவணி 15-ம்நாள் யப்பானின் புதியயுகம் ஆரம்பமாயிற்று. அன்று யப்பானின் தெற்குக்கோடியாகிய க்யூஷூத்தீவில் காகோஷீமா துறைமுகத்தில் ஒருசீனப்படகு [illegible]கின்றது. அப்படகினின்று [illegible]ருவேறியமுனிவர்ஒருவர்— இந்[illegible]தேச அப்போஸ்தலரான அர்ச். பிரான்சீஸ் சவேரியார் இறங்கினர். அவருடன் ஸ்பெயின்தேச யேசுசபைக்குருஒருவரும், ஒருசகோதரரும், வழியில் மனந்திரும்பிய மூன்றுயப்பானியசாமுராய்களும் இறங்கினர்.

சவேரியார்வந்தகாலம், நாட்டில்அராசகம் தாண்டவமாடிய சமயம். கோறியாவிலிருந்து இறக்குமதியான புத்தமதம் ஷின்ரோயிஸத்தின்மீது சவாரி செய்தகாலம். சக்கரவர்த்தி வலுவிழந்துகிடந்தான். புத்தமதம் தலைதூக்கிநின்றது. நிலமானிய முறை தழைத்தோங்கியது. நிலச்சுவான்தார்கள் பொருமைப் போட்டிகளினுல் நாட்டில்குழப்[illegible]த்தை விளைவித்துவந்தனர்.

### அருளொலி உதயம்

இந்தியாவில் வலைவலையாக வீசி ஆத்துமங்களைஈடேற்றிய அர்ச். சவேரியார் யப்பானிலே தாண்டில்போடவேண்டிய நிலைமையில்இருந்தார். காகோஷீமாவில்தங்கியிருந்த ஒருவருடத்தில் சுமார் நூறுயப்பானியர் ஞானஒளிபெற்றனர். காகோஷீமாவிலிருந்து ஹிராடோ, யமகுச்சி, க்யோற்ரோவழியே ஒய்யீட்டாவிற்கு வந்துசேர்ந்தார். ஆங்காங்கே சிறுசிறு கிறீஸ்துவக்குழாங்கள் ஏற்பட்டன. இரண்டு வருடம் ஐந்துமாதங்கள் உழைத்தபின் 1551-ம்ஆண்டு கார்த்திகையில் சவேரியார் யப்பானைவிட்டுப்பிரிந்தபோது சுமார் இரண்டாயிரம்கிறீஸ்துவமக்கள் அங்கு இருந்தனர். ஞானவரட்சிமிகுந்த யப்பானில் பாலைவனச்சோலை போலத்திகழ்ந்தனர் இக்கிறீஸ்தவர்கள். இவர்கள் இயல்பிலேயே பரந்தஅறிவும், தீட்சண்யபுத்தியும், அயராஉழைப்பும் கொண்டிருந்தனர். சவேரியார் தாம்எழுதிய கடிதமொன்றில் 'யப்பானியகிறீஸ்தவர்கள் எனக்குஓர் இன்பம்; எனதுஉள்ளத்தைக் கொள்ளைகொண்டவர்கள் அவர்கள்!" எனப்பெருமையுடன் குறிப்பிடுகிருர். சூரியோதய நாடாகிய யப்பானில் கிறீஸ்துவின் அருளொளிதோன்றிச் சரியாக நானூறுவருடங்கள் ஆகின்றன.

—நல்லாயன்

## பத்திமாவும் போர்த்துக்காலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிலும் வாழ்க்கைத்தரத்திலும், பொருளாதார நிலைமையிலும் இன்றுஅதிகஞ் சிறந்து விளங்குகின்றது. இந்த ஆசீர்வாதங்களுக்கெல்லாம்போர்த்துக்கேய மக்கள் பத்திமாநாயகிக்கே நன்றிபாராட்டுகின்ருர்கள்.

கம்யூனிஸத்தின் மாபெருங் கெடுதிகளை எடுத்துக்காட்டி அநேக வருடகாலம் தமதுஅரிய பிரசங்கங்களாலும், ஆணித்தரமான கட்டுரைகளாலும் சகலரையும் எச்சரித்துநல்வழிப்படுத்திவந்த பிரான்சீஸ் பெக்மன் அதிமேற்றிராணியார் பத்திமா யாத்திரைக்கு எம்மை ஆயத்தப்படுத்திச்செய்த பிரசங்கங்களுள்ஒன்றில் கூறியிருப்பதுவருமாறு: "கிறீஸ்துசமயத்துக்கும் கம்யூனிஸத்துக்குமிடையிலும்—தேவதாயாருக்கும்சாத்தானுக்குமிடையிலுமாக உலகம் இன்று ஓர் இறந்தபோரில் ஈடுபட்டிருக்கின்றது. சாத்தான் ஓர்பயங்கரபோராட்டம்தொடுத்துக்கொண்டிருக்கிருன். ஏனெனில், தனது தலையை—சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்கென்றே நித்தியகாலமாக மரியம்மாள் சிருஷ்டிக்கப்பட்டாளென்பதை அவன் நன்ருயறிவான். பரிசுத்த தேவதாயாரோ இந்தப்போராட்டத்துக்கென்று செபமாலை ஆயுதத்தை நமக்குத் தந்திருக்கிருர்" என்பதுவே.

### பூசையோடு ஆரம்பிக்கிறர்

திரு. ஜே. ஹவாட் மைக்கிருத் அவர்கள் அமெரிக்க ஐக்கியதேச புதிய அற்றேணி ஜெனறலாகப் பதவியேற்பதற்குச் சிலமணிநேரத்தின்முன் வாஷிங்ரன் நகரிலுள்ள தமது மனையில் நிறைவேறிய திவ்வியபூசைக்கு உதவிசெய்யலாயினர். இந்தவழக்கத்தை இவர் எட்டுவருடங்களின்முன் தொடக்கிக்கொண்டார். அரசாங்கசேவையிலே உத்தியோகபதவி ஒன்றுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வோர் முறையும் இவர் தமது மனையிலே திவ்வியபூசைப் பலிஒப்புக்கொடுக்கப்படுமாறு ஒழுங்குபண்ணிவந்திருக்கிருர். இவர் அமெரிக்க ஐக்கியதேச சொலிசிற்றர் ஜெனறலாகவும், மும்முறை றோட் தீவின் தேசாதிபதியாகவும் இருந்திருக்கிருர். 1947-ம் ஆண்டு றோட்தீவுக்கு அமெரிக்க ஐக்கியதேச செனற்றர்ஆயினர். இவர்மனையில் நிறைவேறும் திவ்வியபூசைக்கு இவரும், பாரியாரும், புதல்வரும், [illegible] ரும் சமுக[illegible].

## மாதா அருளிய மற்றோர் காட்சி

ஸ்பானிய தேசத்தின் வடபகுதியிலுள்ள ஹூவெஸ்கா நகருக்குச் சமீபமான சந்தாலெசினு எனும் கிராமத்திலே பெலிசா குவெறேறோஎனும் பதினெரு வயசுடைய சிறுமிக்குப் பரிசுத்த தேவதாயார் காட்சியளித்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இதுபற்றித் திருச்சபை அதிகாரிகளின்தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அற்புதசம்பவத்தைப் பற்றி அறியவந்ததும் ஆயிரக்கணக்கானதரிசகர்கள் கால்நடையிலும், பஸ்கள், மோட்டார்கார்களிலும் சந்தாலெசினு எனும் கிராமத்தைநோக்கிப் பெருந்திரளாகச் சரிந்துகொண்டிருக்கின்ருர்கள். சில தினங்களுக்குமுன் பெலிசா குவெறேறோ எனும்சிறுமி தான் 'பீச்'பழங்கள் சேகரிப்பதற்காகத் தனது வீட்டிலிருந்து சென்றபோது, அக்கிராமத்தின் சுற்றுடலிலுள்ள ஓர் சேமக்காலைக்குச் சமீபமாகத் தேவதாயார் தனக்குக் காட்சியளித்துச் சிறிதுவேளை தன்னுடன் சம்பாஷித்ததாகவும், அடுத்த இருவாரங்களிலும் தனக்குத் தினமும் காட்சியளிப்பதாய் உறுதிவாக்களித்ததாகவும் கூறினள். மறுநாள் விசாரணைப்பங்குக்குரவர், மற்றும் மூவாயிரம்பேர்கள் சமேதராய்த் திரும்பவும் அங்குசென்ருள். சென்றதும் முதல்நாள் தேவதாயாரைத் தான்கண்டதாகக் கூறிய இடத்தைச்சமீபித்ததே தனக்காகக் காத்திருக்கும்படி சுவாமியாருக்கும், சனக்கூட்டத்துக்கும் சைக்கினை செய்தாள். அதன்மேல் அவள் முன்நடந்து சென்று முழந்தாளில்வீழ்ந்து, தேவதாயாரோடு மிகுந்தபக்திப்பரவசத்துடன் சம்பாஷிப்பதாக மனப்பதிவை உண்டுபண்ணக்கூடிய தோற்றமளித்தாள். பிந்தச் சுவாமியாருடன் பெலிசா பேசியவிடத்து: தேவ்தாயார் ஆகாயத்திலிருந்து ஓர்மேகத்தின்மேல் இறங்கிவந்து தனக்குக் காட்சியளித்துக் கால்மணிநேரம்வரையில் தன்னுடன் பேசியதாகக் கூறினுள்.

### ரேமையின் ருஷியகல்லூரி

1929-ம் ஆண்டு பதினொரம்பத்திநாத பாப்பானவராலே ரோமாபுரியில் அடியிடப்பெற்ற ருஷியகல்லூரி தனது இருபதாம் வருடநிறைவுவிழாவைச் சமீபத்திலே கொண்டாடியது. ருஷியாவிலே சமயவாழ்க்கை மறுமலர்ச்சியடையுமென்றநம்பிக்கையுடன் ருஷியபாஷாஅறிவிலும், பைசான்ரின் திருச்சடங்கு ஆசாரமுறையிலும் குருமாரைப்பயிற்றுவதே இக்கல்லூரியின் பிரதம நோக்கமாகும். கடந்த இருபதுவருடங்களிலும் ருஷியாவிலிருந்து வெளிகொண்டு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அமெரிக்காவிலும் அடைக்கலம் புகுந்திருக்கும் ருஷிய அகதிகளுக்குச் சமயவாழ்க்கையில் உதவிஅளிக்குமாறு நூற்றுக்கணக்கான குருமார் இதிலே பயிற்றப்பட்டிருக்கிருர்கள். இந்தவிழாவின்போது பாப்பரசர் இக்கல்லூரிக்குத் தமது சோபனமும், விசேஷஆசீர்வாதமும் அனுப்பியிருந்தார்.

### கண்கண்ட புதுமை

கொழும்பிலே ஹவ்லக் ரவுணைச் சேர்ந்தவரான ஸ்ரீமதி பி. பி. டே அபுறு அவர்கள் லூர்துதிருப்பதி கண்டு திரும்பவும் இலங்கைவந்து சேரலாயினர். அப்பதியிலே மூன்று தினங்கள் இவர்தங்கியிருந்தபோது ஓர் புதுமையென்று சொல்லக்கூடியதாய் நிகழ்ந்த ஓர் அற்புதஆரோக்கியத்தைக் கண்ணாரக்கண்டுகொள்ளும் அதிஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார். பிணியாளரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்குக்கென்று பலங்கெட்டு அசகதாயிருந்த ஆங்கிலபோர்வீரர் ஒருவர் சில்லுகள் வைத்த நாற்காலி ஒன்றிலே தள்ளிக் கொண்டுவரப்பட்டார். அவருக்குச் சமீபமாக ஸ்ரீமதி டே அபுறு நின்ருர். திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டுச்சிறிதுவேளையால் அங்கு சமுகமாயிருந்தாரெல்லாம் பிரமிக்கும்படியாக அப்போர்வீரர் நாற்காலியினின்றும் திடீரென எழுந்துநின்ருரென இவர்கூறுகின்ருர். இதுபற்றிக் குறைந்தபட்சம் ஆறுமாதம் விசாரணைநடந்தே உத்தியோகமுறையான அறிக்கை வெளியாகுமாம்.

### பரிசுத்த வருடஆரம்பம்

இவ்வருடம் நத்தார்த் திருநாளுக்கு முதல்நாள் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் ஆடம்பரதிருவைபவங்களுக்குரிய வெண்மயமும் பொன்மயமுமான திருஅங்கிகள்தரித்து, வத்திக்கான்மாளிகையிலிருந்து கருஞ்சிவப்பு வர்ணச் சிம்மாசனத்திலே சம்பேதுருவானவர் மகாஆலய வாயிற்படிக்குக் கொண்டுபோகப்பெறுவர். அங்கே கருதினல்மார், ஸ்தானீகர்கள், குருசிரேஷ்டர்கள், குருமார், உலகின் சகலநாடுகளிலுமிருந்துபோன யாத்திரிகராய் மாபெரும் சனக்குழாம் சமூகமாக ஓர்வெள்ளிச் சுத்தியல்கொண்டு அம்மகாஆலயதிருக்கபாடத்திலே மும்முறை தட்டுவார். அப்போது கடைசியான பரிசுத்தவருடமுதல் கடந்தபதினைந்து வருடங்களாக அத்திருக்கபாடத்தை அடைத்திருந்த சிற்பவேலை ஓர் புறமாக அகற்றப்படவே, தேவதோத்திர சங்கீதம் பாடியவண்ணம் பாப்பரசரை முதன்மையாகக் கொண்டு ஆலயத்தினுள்ளே பயபக்தியான ஊர்வலம் ஒன்று நடந்தேறும். இவ்வாருய் 1950-ம் ஆண்டின் பரிசுத்த அல்லது யூபிலிவருடம் ஆரம்பமாகும். திருச்சபைச் சரித்திரத்திலே இந்த[illegible]னிதவருடம் மகாமுக்கியத்துவம்வா[illegible]ந்த தொன்ருய் இருக்குமென நம்பப்படுகிறது. அம்மகா ஆலயத்துள் பாப்பரசர் பிரவேசிக்கும் நேரமுதல் சரியாய் ஒருவ்ருடத்தின்பின் அத்திருக்கபாடம் திரும்பவும் சுவரிட்டுஅடைக்கப்படுகிறவரையிலே கிறீஸ்தஉலகின் ஒவ்வோர்கோணத்திலுமிருந்துபோகும் யாத்திரிகர்கள் யூபிலிவருடங்களிலே திருச்சபையால் அருளப்படும் விசேஷ ஆசீர்வாதங்கள், பலன்களை அடைந்து கொள்ளும்படியாய் அதனூடாகச் சம்பேதுருவானவர்மகா ஆலயத்துள் இடையருது சரிந்தவண்ணமிருப்பார்கள்.

### யப்பானிய மனந்திரும்புதல்கள்

யப்பானிலே சகா எனுங்கிராமத்தில் ஒரு பெருந்தொகையானேர் மனந்திரும்பியசம்பவம் ஏலவேதானே அறியப்பட்டதாகும். சென்றஆவணிமாதம் 15-ந்திகதி பரிசுத்த தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாளுக்கு முந்திய சிலதினங்களிலே மேலும் 1,200 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இவர்களுடன் அந்தக்கிராமத்திலே மொத்தமாக வசிக்கும் 2,850 சனங்களில் சுமார் 2,000 பேரும் ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கராகிவிட்டார்கள். வருகிறகார்த்திகைமாத இறுதியிலே ஏறக்குறைய முழுக்கிராமமுமே ஓர் கத்தோலிக்ககிராமமாகிவிடக்கூடியதாகும்போல் இருக்கிறது. இந்தமனந்திரும்புதல் இயக்கத்தை யப்பானிய புதினப்பத்திரிகைகள் எடுத்துக்காட்டி அதற்குச் சாதகமாகக் குறிப்புரைகள் எழுதியிருக்கின்றன. புகுசியாமா, அயாபிபோன்ற பட்டினங்களும், ஒபாற்ரு, மொனேனேபே, இக்குற்ரு எனும் அயற்கிராமங்களும் சகாகிராமத்தின் மாதிரிகையைப் பின்பற்ற ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும் அநேக கிராமங்கள் குருமாரை அனுப்பிவைக்கும்படி கத்தோலிக்க மிஷன்களைக் கேட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசவர்த்தமானம்

## குருத்துவமாணவர் பிரயாணம்

அமலோற்பவ மரியநாயகி சபையைச் சேர்ந்தவர்களான வண. காஸ்றன் அல்வீனெஸ் விறதரும், வண. பி. இராயப்பு விறதரும் கிறகோரியாரின் சர்வகலாசாலையிலே குருத்துவத்துக்குரிய வேதசாஸ்திரங்கள் படிப்பதற்காக "எஸ். எஸ். லா மார்சேல்ஸ்" எனுங் கப்பலிலே சென்ற 28-ந் திகதி புதன்கிழமை றோமாபுரிக்குப் பிரயாணமாயினர். இவர்கள் யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள். சம்பத்திரிசியார் கல்லூரிப் பழையமாணவர்கள். இவ்விருவரும் தங்கள் லௌகீக கல்வியைமுடித்து உத்தியோகங்கள் பெறவிருந்தகாலத்திலே தேவ அழைத்தலின்பேரில் குருத்துவ பதவியைத் தெரிந்துகொண்டார்கள். வண. அல்வீனெஸ் விறதர் நொவீசாகச் சேருமுன் லண்டன் இன்றர் ஆட்ஸ் பரீட்சையில் அரங்கேறியிருந்தார். வண. இராயப்பு விறதா எச். எஸ். சி. சயென்ஸ் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது தேவஅழைத்தலை மேற்கொண்டார்.

## டக்றர்மார் நியமனம்

டக்றர் பி. இராசசிங்கம் அவர்களிடமாக யாழ்ப்பாணச் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம்பெற்ற டக்றர் பி. கே. இரத்தினம் அவர்கள் இங்குவந்து தமது பதவியைக் கையேற்றிருக்கின்றார்.

முல்லைத்தீவு டிஸ்திறிக் வைத்திய அதிகாரியாயிருந்துவந்த டக்றர் எஸ். ஜே. இரத்தி நேசர்அவர்கள் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

டக்றர் ஏ. சங்கரப்பிள்ளை அவர்கள் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு டிஸ்திறிக் வைத்தியஅதிகாரியாக மாற்றப்பட்டிருக்கின்றார்.

## க்ஷயரோக ஊசிமருந்து

இலங்கையிலே க்ஷயரோகத் தடை இயக்கத்தின் தலைவரான டக்றர் ஜி. ரணவக்காஅவர்கள் யாழ்ப்பாண நகர மண்டபத்திலே க்ஷயரோகத்தைப்பற்றி நிகழ்த்திய ஓர் சொற்பொழிவிலே, பி. சி. ஜி. எனும் க்ஷயரோக ஊசிமருந்து நாம் எதிர்பார்த்திருந்ததிலும் அதிகம் முன்னதாகவே யாழ்ப்பாணத்துக்குப் போதியளவாகக் கிடைக்குமாறு செய்யப்படுமென யாழ்ப்பாண மக்களுக்கு உறுதிவாக்களித்திருக்கின்றார். மேலும் அவர் தொடர்ந்து பேசியபோது: க்ஷயரோகமானது குடும்பத்திலே பரம்பரையான ஓர் நோயன்று; க்ஷயரோகத்துடன் எந்தப்பிள்ளையுமே பிறப்பதில்லை; கெட்ட சுகாதார நிலைமைகள், பொருளாதாரக் குறைவுகள் போன்றவைகளாலேயே இந்தநோய் அதிகமாக உண்டாகின்றது; க்ஷயரோகம் வாராது தடுப்பதற்குப் பி. சி. ஜி. ஊசிமருந்து அதிகம்சிறந்ததாகும் எனக் கூறலாயினர்.

## காரியாதிகாரிக்குப் பிரியாவிடை

வலிகாமம்கிழக்குப்பகுதிக் காரியாதிகாரியான (டி. ஆர். ஓ.) திரு. ரி. முருகேசபிள்ளை அவர்கள் உத்தியோக தானம்மாறிக் கீழ்மாகாணத்துக்குச் செல்வதை முன்னிட்டுச் சென்றவியாழக்கிழமை பிற்பகல் நீர்வேலியிலே அன்னாருக்கு ஓர்பிரியாவிடை உபசாரம் அருளப்படலாயிற்று. அதிகார் ஏ. நாகநாதர் அவர்கள் தலைமைவகித்தனர். அச்சுவேலிக் குடியேற்ற திட்டம், வடமராட்சிப் பரவைக் கடல் திட்டம், புத்தூர் நீர்ப்பாசன திட்டம் ஆதியனவற்றின் அபிவிர்த்தி சம்பந்தமாய்க் காரியாதிகாரியவர்கள் ஆற்றியுள்ள அரும்பெரும்சேவைகளைப் பிரமுகர்கள் பலரும் பாராட்டிப் பேசி அவருக்குப் புகழ்மாலை சூட்டினின்றார்கள். பின்னர் வலிகாமம்கிழக்குவாசிகளின்போல் அவருக்குப் பிரியாவிடைப் பத்திரம் ஒன்று படித்துக் கொடுக்கப்படலாயிற்று.

## யாழ்ப்பாணமும் மரவரியும்

யாழ்ப்பாணத்திலே மரவரித்திட்டம் பரீட்சார்த்தமாய் நடத்தப்படுவது சம்பந்தமாய்த் திரு. சி. குமாரசாமி அவர்களின் கேள்விக்குச் சென்ற சபையிலே உள்நாட்டு மந்திரியார் சென்றர் ஈ. ஏ. பி. விஜயரத்தின அளித்த பதில் வருமாறு: "யாழ்ப்பாணத்திலே மரவரித்திட்ட விஷயமாய் அரசாங்கம் திருப்தியடையவில்லை. அத்திட்டம் வெற்றியளிக்கவில்லை. அதனைத் தொடர்ந்து நடத்திவருவதா அல்லது நிறுத்திவிடுவதா என்பதுபற்றி ஆலோசிப்பதற்குக் கொம்மிற்றிஒன்றை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்துவருகிறது. யாழ்ப்பாணமக்கள் இதுவிஷயமாய்த் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு வசதியளிக்கப்படுவார்கள்" என்பதே.

## யாழ்ப்பாண ஈரவெங்காயம்

வடபெரும்பாக கமப்பொருள் உற்பத்தியாளரின் வருடாந்த பொதுக் கூட்டம் சென்ற வியாழக்கிழமை நடைபெற்றபோது, அச்சங்க காரியதரிசி சமர்ப்பித்த அறிக்கையிலே, அடுத்தவருடம் இலங்கைக்குத் தேவைப்படும் ஈரவெங்காயத்தில் மூன்றில் ஒருபங்கை யாழ்ப்பாண டிஸ்திறிக் உதவமுடியுமெனத் தெரிவித்திருக்கிறார். இந்த ஐக்கியசங்கம் இவ்வருடத்தின் முதலாவது, இரண்டாவது போகங்களிலே தனது உடன் அங்கத்துவ சங்கங்களுக்குப் 10,000 அந்தர் விதை வெங்காயம் உதவியிருக்கின்றது. இப்போகத்தில் அது 75,000 அந்தர் ஈரவெங்காயம் விற்பனைக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஈரவெங்காயச்செய்கையை ஊக்கப்படுத்துகிறதானால் அரசினர் அதற்கு றுத்தல் ஒன்றுக்கு 20 சதவீதம் அளித்த உத்தரவாத விலையை நிலைபெறச் செய்யவேண்டுமென்றும், அப்போது அடுத்தவருடம் இலங்கைக்குத் தேவைப்படும் ஈரவெங்காயத்தில் மூன்றில் ஒன்றை யாழ்ப்பாண டிஸ்திறிக் உதவமுடியுமென்றும் காரியதரிசி அறிக்கையிட்டலாயினர்.

## புதிய பட்டின சங்கங்கள்

காங்கேசன்துறை, மானிப்பாய் எனுமிடங்களில் இருந்துவரும் கிராமச் சங்கங்களுக்குப் பதிலாக அடுத்து நிகழும் 1950-ம் ஆண்டு தைமாதமுதல் ரவுண் கவுண்சில் எனப்படும் பட்டின சங்கங்களை ஏற்படுத்த அரசினர் தீர்மானித்திருக்கின்றனர். அதற்கான நடவடிக்கைகள் இவ்வருட இறுதியில் எடுக்கப்படும். தற்போது வடமாகாணத்திலே சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, மன்னார், முல்லைத்தீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, வவுனியா என்னுமிடங்களில் இந்தப் பட்டினசங்கங்கள் இருந்துவருகின்றன.

## பிரசவ ஆரோக்கிய சாலை

நெடுந்தீவிலே சென்ற வியாழக்கிழமை பிரசவத்துக்கும், குழந்தைகளைச் சேமமாகப் பராமரிப்பதற்குமான ஆரோக்கியசாலை ஒன்று கிராமச் சங்க தலைவர் திரு. வி. எஸ். ஜேம்ஸ் அவர்களால் திறந்துவைக்கப்படலாயிற்று. அத்தருணம் நெடுந்தீவு வைத்திய அதிகாரியான டக்றர் கே. குகநாததாசன் அவர்கள் குழந்தைகளையும், பிரசவிக்கும் தாய்மார்களையும் பராமரிப்பதுபற்றிப் பேசிப் பிந்தச் சுகாதார துணை உத்தியோகஸ்தரான திரு. வி. சின்னத்துரை அவர்களின் உதவியோடு நோயாளருக்குச் சிகிச்சையருளினார்.

## இலவசமத்தியானப் போசனம்

அனுராசபுர டிஸ்திறிக்கைச் சேர்ந்த நுவெரகம்பலாத்தையைச் சேர்ந்த இரு அரசினர்பாடசாலைகளிலே வருடமுழுவதும் பிள்ளைகளுக்கு மத்தியானப் போசனமாக அரிசிச் சாதமும் கறியும் கொடுப்பதற்கான ஓர் நவீன திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதன்படி, அரசினர் தினமும் [illegible] இலவசமத்தியானப் போசனத்துக்கென்று கொடுக்கும் ஆறுசதமுங்கொண்டு தலைமையாசிரியர்கள் அரிசிவாங்கிச் சாதம் ஆக்கிக்கொள்ளுகின்றனர். அங்குள்ளகிராமவாசிகள் கிராமாபிவிர்த்திச் சங்கங்கள் மூலமாகப் பிள்ளைகளுக்கு வேண்டிய கறியைத் தினமும் உதவுகின்றார்கள். அதாவது அவர்கள் கறிக்கு வேண்டிய செலவுப் பணத்தைச் சேமிக்கின்றார்கள். இந்த முறைப்படி, ஓர் குடும்பம் பதினைந்துவாரத்துக்கு ஒருதரம் ஓர்கறி உதவுவதாய் முடிகின்றது.

## வத்திக்கான் பொருட்காட்சி

1950-ம் ஆண்டின் பரிசுத்த வருடத்திலே வத்திக்கானில் நடைபெறவிருக்கும் கலைப் பொருட்காட்சிக்கென்று இலங்கையிலுள்ள ஓ. எஸ். பி. சபையாரால் அதாவது சில்வேஸ்திரிய ஆசீர்வாதப்ப சபையாரால் கண்டிப் பிரபல சிற்பாசாரிகளைக்கொண்டு செய்யப்பெற்ற சிறந்தவேலைகள் அமைந்த ஓர்குருசும், சங்கிலியும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அக்காட்சியிலே இவைகள் திருச்சபையின் அலங்காரபூஷணங்களுக்கெனக் குறிக்கப்பட்டுள்ள பகுதியில் கீழ்நாட்டுச் சிற்ப, சித்திரக் கலைப்பொருட்கள் மத்தியில் பிரஸ்தாபமாகக் காட்சிக்கு வைக்கப்படும். ஓ. எஸ். பி. சபையைச் சேர்ந்த வண. ஹிலேறியன் றுடோல்வ் விறதரே இவற்றை றோமாபுரி கொண்டுசெல்லுகின்றார். கொழும்பிலிருந்து சென்ற வெள்ளிக்கிழமை பிரயாணமான 'யுகோலியோ விவால்டி' எனும் இத்தாலிய கப்பலிலே இவர் அங்குசெல்லுகின்றார். இவருடன் அதே சபையைச் சேர்ந்த வண. புறுனோ டேனியல் விறதரும் செல்லுகிறார். இவர்கள் றோமாபுரியிலே அடுத்தவருடம் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெறுவார்கள். இலங்கையிலே ஓ. எஸ். பி. சபைச் சரித்திரத்தில் அதனைச் சேர்ந்த நொவீஸ்மார் இருவர் றோமாபுரியிலே சான் ஆன்செல்மோவின் சர்வதேச ஆசீர்வாதப்பர் சபைக் கல்லூரியில் உயர்ந்தவேதசாஸ்திரங்கள் கற்றுவருமாறு அனுப்பப்படுவது இதுவே முதன்முறையாகும். விறதர் றுடோல்வ் அவர்கள் தத்துவசாஸ்திரத்திலும், கனன்சட்ட சாஸ்திரத்திலும் பண்டிதபட்டத்துக்குப் படித்து வருவார். விறதர் டேனியல்அவர்கள் கிறகோரியாரின் சங்கீதங்களிலும, "போலிபோனிக்" இசைப்பாட்டிலும் விசேஷ பயிற்சியடைவார்.

## பாப்பரசருக்குத் தெட்சணை

பொல்லநறுவைச் சரித்திரகாலத்துக் கலைப்பண்பாடுகளை அனுசரித்து அழகிய சித்திரகொத்து வேலைப்பாடுடையதாய்ச் செய்யப்படும் வெள்ளி ஆபரணப் பேழைஒன்று பரிசுத்த பாப்பரசருக்குத் தெட்சணையாகச் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. 1950-ம் ஆண்டின் பரிசுத்த வருடத்திலே இலங்கையிலிருந்து நித்தியநகராகிய றோமாபுரிக்குச் செல்லவிருக்கும் யாத்திரிகர்கள் இந்தஆபரணப்பேழையைத் தங்களுடன் எடுத்துச்சென்று, அங்கு தங்களுக்குப் பரிசுத்தபிதா அளிக்கவிருக்கும் விசேஷ பேட்டியின்போது அவருக்குத் தெட்சணையாகக் கையளிப்பார்கள்.

## மனுஷியைக்கொன்ற மதயானை

அனுராசபுரத்தைச்சேர்ந்த நம்பவா எனுங்கிராமத்திலே சென்ற 1-ந் திகதியன்று ஓர்பெண் விறகுசேகரிப்பதற்காகத் தனது வீட்டிலிருந்து சிறிது தூரம் சென்றபோது யானைஒன்று அவள்முன் திடீரென எதிர்ப்பட்டது. அதைக் கண்ணுற்றதே தப்பிக்கொள்ள வகையின்றி அவள் ஓட்டமெடுத்தனள். ஆனால் யானை அவளைத் தனதுதும்பிக்கையால் பிடித்துத் தூக்கிச் சற்றுத் தூரத்துக்கப்பால்வேகமாய்வீசிவிடவே அவள் நிலத்தில் மோதுண்டு உயிர்துறந்தனள். இந்த யானை ஓர் மதம்பிடித்த யானையென்று அதனைக் கொல்லும்படியாக இலவச லைசென்ஸ் கொடுப்பதாய் வடமத்திய மாகாண ஏசன்றர் பிரசித்தஞ் செய்திருக்கிறார்.

## புதிய அப்புக்காத்துமார்

கொழும்பிலே சென்ற ஆவணிமாதம் நடந்தேறிய சட்டசாஸ்திர கடைசிப் பரீட்சையிலே 24 பேர் பிரக்கிராசிமாராகவும், 24 பேர் அப்புக்காத்துமாராகவும் அரங்கேறியிருக்கின்றார்கள். புதிய அப்புக்காத்துமாருள் பன்னிருவரும், புதிய பிரக்கிராசிமாருள் ஆறுபேரும் தமிழர்களாவர்.

## பருத்திச்செய்கை

நிகழும் ஐப்பசிமாதத்தில் ஆரம்பமாகும் மகாபோக காலத்திலே மூவாயிரம் ஏக்கர்நிலத்தில் பருத்தி செய்கை பண்ணக் கமத்தொழிற்பகுதி திட்டம் வகுத்திருக்கிறது. இந்த மூவாயிரம் ஏக்கர் நிலத்திலும் மாத்தளை வடக்கில் 1,100 ஏக்கரும், ஹூறுளுப்பலாத்தையில் 750 ஏக்கர் நிலமும், கலகம்பலாத்தையில் 650 ஏக்கரும், நுவரகம்பலாத்தையில் 500 ஏக்கரும் அடங்கும். வடமத்திய மாகாணத்திலும் பருத்தி செய்கைபண்ணுதற்கான திட்டம்ஒன்றை வகுப்பதிலும் கைத்தொழில் மந்திரிசபை ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இன்னும் பெல்வெஹெறு எனுமிடத்திலுள்ள அரசாங்க கமத்தில் பஞ்சையும் விதையையும் வேறுக்கும் யந்திரம்ஒன்றையும் அமைக்கக் கமத்தொழிற்பகுதி தீர்மானித்திருக்கிறது.

## ஆஸ்பத்திரி மருந்துச்சாலை

யாழ்ப்பாண அரசினர் பெரிய ஆஸ்பத்திரியிலே வெளிநோயாளரைப் பார்வையிட்டு மருந்து கொடுப்பதற்கென்று இற்றைக்கு ஓர் வருடத்தின் முன் கட்டிமுடிக்கப்பெற்ற புதிய கட்டிடப் பகுதி சென்றவாரம் பாவனைக்குத் திறந்துவைக்கப்படலாயிற்று. ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்ட நோயாளர் சிகிச்சை பெறுவதற்கென [illegible] வந்துகூடியிருந்தும் ஒரு டக்றர் மாத்திரமே அவர்களைப் பார்வையிட்டு மருந்தெழுதிக் [illegible] வண்ணமிருந்தார். இதையிட்டுப் பொதுசனர்மத்தியில் பெரும் [illegible] முறுப்பு எழலாயிற்று. இதுகாலவரை இருந்துவந்த வெளிநோயாளரின் மருந்துச்சாலையில் இடம் மிகநெருக்கடியாய் இருந்ததையிட்டுப் புதிய ஓர் கட்டிடத்தை அமைக்க அரசினர்தீர்மானித்தனர். இதற்கு 1946-ம் ஆண்டு ஆனிமாதம் 29-ம் திகதியன்று அரசாங்கசபையிலே யாழ்ப்பாணப் பிரதிநிதியாயும், உள்நாட்டு மந்திரியாராயும் இருந்த சேர் அருணாசலம் மகாதேவா அவர்களால் அஸ்திவாரக்கல் இடப்படலாயிற்று. இதனைக் கட்டிமுடிக்க ஏற்பட்ட செலவு நாலரைலட்சம் ரூபா வரையிலாகும். மின்சார தீபமேற்றக் கறெண்ற் உதவப்படாமையால் இக்கட்டிடம் நேரகாலத்துடன் திறந்துவைக்கப்படவில்லை. யாழ்ப்பாணப் பவர் நிலையத்திலே எஞ்சின்கள் தற்போது பழுதுபார்க்கப்பட்டிருப்பதால் நகரசங்கம் இதற்குக் கறெண்ற் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நிமிஷம் 400 ஆணிகள்

கொள்ளுப்பிட்டியிலே நவமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இரும்புஆணிகள் செய்யும் தொழிற்சாலை சென்ற வெள்ளிக்கிழமை போக்குவரத்து மந்திரியார் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்படலாயிற்று. இலங்கையிலே இம்மாதிரியான தொழிற்சாலை இது ஒன்றுதான். அதிகம் பிந்திய நவீன மாதிரியான யந்திரங்களைக் கொண்ட இத் தொழிற்சாலை எல்லாவித பருமனிலும், எந்த அளவிலும் நிமிஷம் ஒன்றுக்கு 400 ஆணிகளைச் செய்யக்கூடியது. இதன் சொந்தக்காரர் தற்போது இலங்கையில் விலைப்படும் ஆணிகளைக் காட்டிலும் அதிகங் குறைந்தவிலையில் தங்கள் ஆணிகளை விற்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத வினவிடை

— IV —

### சுதனுனவர் எங்கள் அவதரித்தவர்

1. சுதனுனவர் எந்தத்தேவவெளிக்கிரியையால் நமக்கு நித்தியசீவியத்தின் அறிவை உரிமையாக்குகிறார்?

அவதரிப்பினுல்.

2. அவதரிப்பு என்றுல் என்ன?

மனிதராகிய நாம் தேவவார்த்தைகளை அறியும்படி, தேவவார்த்தையான சுதனுனவர் மனிதனுய் உற்பவித்துப் பிறந்ததாம்.

"வார்த்தையானவர் மாம்சமாகி நமக்குள்ளே வாசமாயிருந்தார். அவருடைய மகிமையைக் கண்டோம்" —அரு. I. 14

"நித்திய சீவியவார்த்தைகள் உம்மிடத்திலிருக்கின்றதே" —அரு. VI. 69.

"வார்த்தையாகிய அவர் இவ்வுலகத்திலே வருகிற எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாயிருந்தார்" —அரு. I. 9.

3. அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணத்திலே அவதரிப்பைக்குறிக்கும் பிரிவைச் சொல்லு?

"இவர் பரிசுத்த ஆவியினுலே கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாய் இடத்தில் நின்றுபிறந்து"

4. மனிதனுய் அவதரித்த சுதனுகிய சருவேசுரனுக்குப் பேர் என்ன?

யேசுக்கிறீஸ்து.

5. யேசு என்பதற்கு அர்த்தம் என்ன?

நம்மை மீட்கிறவர் என்று அர்த்தமாம்.

6. அவருக்கு யேசுஎன்னும் பெயர் எப்படித் தரிக்கப்பட்டது?

சம்மனசானவர் பரலோகத்திலிருந்து தெரிவித்ததின்படி தரிக்கப்பட்டது.

"அவருக்கு யேசு என்னும் நாமஞ்சூட்டுவீர்"—லூக். I. 31.

7. கிரேக்க பாஷையில் "கிறீஸ்து" அல்லது எபிரேய பாஷையில் "மெசியாஸ்" என்பதற்கு அர்த்தம் என்ன?

அபிஷேகம் பெற்றவர் என்று அர்த்தமாம்.

8. அவர் ஏன் கிறீஸ்து என்னப்பட்டார்?

அவர் தேவத்துவம் என்னும் தைலத்தால் அபிஷேகிக்கப்பட்டு, தீர்க்கதரிசியினதும் குருவினதும் இராசாவினதும் முழு அதிகாரத்தைப் பெற்றிருப்பதினுல்தான்.

"சர்வேசுரனுடைய குமாரனுகிய கிறீஸ்து"—மாற். XIV. 61.

"கிறீஸ்துநாதர் என்னப்படுகிற மெசியாஸ்"—அரு. IV. 25.

"ஆண்டவருடைய இஸ்பிரீத்துவானவர் என்மேலிருக்கிறுர். ஆதலால் அவர் என்னை அபிஷேகம்பண்ணி அனுப்பினுர்"—லூக். IV. 18.

"அவர் வல்லமையுள்ள தீர்க்கதரியாயிருந்தார்"—லூக். XXIV. 19.

"சுதனுகிய யேசுநாதர் நமக்கு மகா பிரதான குருப்பிரசாதி"—எபி. IV. 14.

"நான் இராசா என்று நீரே சொல்லுகிறீர்"—அரு. XVIII. 37.

9. யேசுக்கிறீஸ்துநாதர் மெய்யான சருவேசுரனு?

ஆம், அவர்பிதாவானவரோடும் ஆவியானவரோடும் ஒரே தேவசுபாவமுடையவராய் இருப்பதால் மெய்யான சருவேசுரன் தான்.

10. அவர்எப்போதும் சருவேசுரனு?

ஆம். அவர் எப்போதும் சருவேசுரன் தான்.

11. அவர் மெய்யான மனிதனுமா?

ஆம். அவர் நம்மைப்போல ஆத்துமமும் சரீரமும் உள்ளவராய் இருப்பதால் மெய்யான மனிதனுந்தான்.

12. அவர் எப்போதும் மனிதனுய் இருந்தாரோ?

இல்லை. மனிதஅவதாரம் பண்ணின நாள் முதல் மாத்திரம் மனிதனுய் இருக்கிறுர்.

13. யேசுக்கிறீஸ்துநாதரில் தெய்வீகமும் மனுஷீகமும் கலக்கப்பட்டிருக்கின்றதோ?

இல்லை. அவருடைய இரண்டு சுபாவங்களும் வெவ்வேறுக இருக்கிறது மன்றி, ஒவ்வொரு சுபாவத்துக்கும் வெவ்வேறு புத்தியும் சித்தமும் உண்டு.

"பிதாவே! என் சித்தப்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும்" XXVI. 39.

14. அவர் இரண்டு ஆட்களாகவும் இருக்கிறுரோ?

இல்லை. தேவசுதன் என்னும் ஒரே ஆளில்தானே தெய்வீகமும் மனுஷீகமும் ஐக்கியப்பட்டிருக்கிறதினுல் ஒரே தேவஆளாய் இருக்கிறுர்.

15. ஆகையால் யேசுக்கிறீஸ்துநாதர் ஆர்?

நமக்காக மனிதனுய்ப் பிறந்த சுதனுகிய சருவேசுரனேயாம்.

16. அவர் ஆரிடத்தில் நின்று பிறந்தார்?

யூதகுலத்தைச்சேர்ந்த கன்னிமரியாய் இடத்தில்நின்று பிறந்தார்.

17. அவர் ஒரு கன்னிகையிலிருந்து பிறந்தாரா?

ஆம். அவர் அர்ச். மரியாயின் கன்னிமைக்கு ஒரு சேதமில்லாமல் அவளுடைய உதரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையினுல் உற்பவித்து அற்புதமாய்ப் பிறந்தார்.

"அவளிடம் உண்டான கெற்பம் இஸ்பிரீத்து சாந்துவினுல் ஆயிற்று"—மத். I. 20.

18. யேசுநாதர் அற்புதமாய்ப் பிறந்தார் என்பதற்கு அர்த்தமென்ன?

அவர் தமது தாயின்உதரத்தினின்று கன்னிமுத்திரைக்கு அற்பமேனும் சேதமில்லாமல் பிறந்தார் என்று அர்த்தமாம்.

19. அர்ச். மரியாய் எப்போதும் கன்னிகையாய் இருந்தாளா?

ஆம். அவள் யேசுநாதரைப் பெறமுன்னும், பெறும்போதும், பெற்றபின்னும் கன்னிகையாய் இருந்தாள.

"நான் புருஷனை அறியேன்"—லூக். I. 34.

20. மனுக்குலம் முழுவதும் சென்மபாவத்தால் கெட்டுப்போய் இருந்தமையால், தேவசுதன் தமது சரீரத்தை மனுக்குலத்தைச்சேர்ந்த அர்ச். மரியாயிடமிருந்து எடுத்தது அவருடைய பரிசுத்த தனத்தோடு இணங்குமா?

அர்ச். மரியாய் சென்மபாவத்தில் உற்பவித்திருந்தால் அது இணங்காதுதான். ஆனுல் தேவசுதன் தமது பரிசுத்ததனத்துக்கு ஒருசேதமும் வாராதபடி தமது தாயாரைச் சென்மபாவமாசில்லாமல் உற்பவிக்கச் செய்தார்.

"பிரியதத்தத்தினுலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே"—லூக். I. 28.

21. அர்ச். கன்னிமரியாயைத் தேவமாதா என்று அழைக்கலாமா?

ஆம். ஆளுக்கும் ஆளுக்கும் இடையில்தான் உரிமை பாராட்டுகிறது. ஆகையால் அவள் யேசுநாதருடைய மனிதசுபாவத்துக்குத்தான் மாதாவானுலும், ஒருதேவ ஆளுடைய மாதாவாய் இருக்கிறுள்.

"என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி?"—லூக். I. 43.

22. அர்ச். சூசையப்பர் எப்போதும் கன்னிகையாய் இருந்த அர்ச். மரியாய்க்கும், மனிதசுபாவத்தில் பரிசுத்த ஆவியினுல் உற்பவித்த யேசுநாதருக்கும் எப்படிச் சம்பந்தப்பட்டிருந்தார்?

அவர் அர்ச். மரியாய்க்கு விரத்தபத்தாவாகவும், யேசுநாதருக்கு வளர்த்த தகப்பனுகவும் இருந்தார்.

23. யேசுநாதர் தமது மனித அவதாரத்தினலே எப்படி நமக்கு நித்திய சீவியத்தின் அறிவை உரிமையாக்குகிறார்?

தேவவார்த்தையான யேசுநாதர் தமது மனிதஅவதாரத்தினுல்நம்மைத் தமது சகோதரராக்கியும், தம்மைத் தேவசுதன் என்று நாம் ஏற்றுக்கொள்ளச்செய்தும், தமது தேவவார்த்தைகளை, அதாவது நித்தியசீவியத்தின் அறிவை, நமக்கு உரிமையாக்குகிறுர்.

"சருவேசுரனுடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே தலைச்சன்"—உரோ. VIII. 29.

"சர்வேசுரனுடைய வார்த்தையைக் கேட்டு, அநுசரிக்கிறவர்களே என் சகோதரர்"—லூக். VIII. 21.

"என்பேரில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியசீவியம் உண்டு"—அரு. VI. 47.

24. யேசுநாதர் எப்படித் தமது மனிதஅவதாரத்தினுல் நம்மைத் தமது சகோதரராக்குகிறுர்?

அவர் தமது சரீரத்தை ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டுபண்ணுமல், நமது மனுக்குலத்தைச்சேர்ந்த அர்ச். மரியாயிடமிருந்து எடுத்தபடியாலேயாம்.

25. யேசுநாதர் எப்படி நாம் தம்மைத் தேவசுதன் என்று ஏற்றுக்கொள்ளச் செய்கிறுர்?

தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியும், ஆச்சரியமான சீவியத்தைநடத்தியும், அற்புதங்களைச்செய்தும், உண்மையான சாட்சிகளை அனுப்பியும் தாம் தேவசுதன் என்று ஒப்பிக்கிறதினுலேயாம்.

---

## "புதுநன்மைக்கான பாடத்திட்டம்"

கத்தோலிக்க பாடசாலைகளிலே பிள்ளைகளைப் புதுநன்மைக்கு முஸ்திப்புச் செய்வதற்கென்றே பிரதானமாக இப்புத்தகம் எழுதப்பட்டது. இந்த முஸ்திப்பு இருவருடங்களில் ஆகவேண்டியவிதமாய் இதிலே தரப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர்வருடப் படிப்பின்விஷயமும் வாரம் ஒன்றுக்கு 5 பாடங்களாக 35 வாரங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. விளக்கிக்காட்டவேண்டிய ஒவ்வோர்வாரத்தின் பாடப்பொருளும் அதன்பிரதான கருத்தும், அந்தந்தவாரத்தின் காரியக்கிரம சூசிகையின்மேலே தரப்பட்டிருக்கின்றன.

கீழேயுள்ள ஐந்து பத்திகளிலும் (1) ஒவ்வோர் வாரத்தின் அடிப்படையான விஷயமும் (2) அந்தந்தநாட்பாடத்தின் பொருளுக்கு இசைந்த வேதாகமசரிதைகளும் (3) மனப்பாடமாகப் படிக்கவேண்டிய ஞானுபதேசப் பாடங்களும் (4) படிக்கவேண்டிய செபங்களும் (5) வியாக்கியானத்தின் சுருக்கமும், அனுசரணைப்புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன

பிள்ளைகளுக்கு ஞானுபதேசம் இலகுவில் விளக்கமாகப் படிப்பிக்க இந்தப்பாடத்திட்டம் மிகவாய்ப்பானது. ஞானுபதேசபாடத்தில் அவர்களுக்கு மிகுந்தஆவலையும் மேலானகரிசனையையும் உண்டுபண்ணக்கூடியது.

குருமார், ஆசிரியர், உபதேசிமார், மரியாயின்சேனையார், மற்றும் கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஓர் அருமையான கைத்துணை இதுவாகும்.

பிரதி விலை சதம் 90.

கிடைக்குமிடம்:

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,

யாழ்ப்பாணம்.

---

## இந்திய அரசாங்கம் விழித்துக்கொண்டது

### கம்யூனிஸ்தகட்சிக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது

இந்திய கம்யூனிஸ்தகட்சிமீது இந்தியஅரசாங்கம் குற்றம்பாரித்துச் சென்றமாசம் 29-ந்திகதி ஒருஅறிக்கை வெளியிட்டிருக்கிறது. இந்தஅறிக்கை 72 பக்கங்கள்கொண்ட ஒருதுண்டுப் பிரசுரமாக, "இந்தியாவிலே கம்யூனிஸ்தர்களின் பலாத்காரம்" என்ற தலையங்கத்துடன் உள்நாட்டுமந்திரி காரியாலயத்தால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இந்திய கம்யூனிஸ்தர்கள் பரந்த முறையிலே பலாத்காரச்செயல்கள் புரிவதற்குத் திட்டமிட்டிருப்பதையும், [illegible] அவர்கள்செய்துவரும் பிரசாரங்களையும் நிரூபிக்கக்கூடிய கம்யூனிஸ்தகட்சிச் சுற்றறிக்கைகளின் சாராம்சங்களும், மற்றும்உதாரணங்களும் அத்துண்டுப்பிரசுரத்தில்அடங்கியுள்ளன. இத்தகையசட்டவிரோதமான நடவடிக்கைகளை ஒழித்துவிடுமாறு அரசாங்கம் உறுதியான முடிவு செய்திருக்கிறதென்றும் அப்பிரசுரம் அறிவிக்கிறது.

அத்துண்டுப்பிரசுரம் மேலும் அறிவிப்பதாவது: "அரசாங்கம் சனநாயக உரிமைகளையும், பிரசாசுதந்தரத்தையும் நசுக்குவதாக ஓயாது கண்டனப் பிரசாரம்செய்வதில் இந்தியகம்யூனிஸ்தகட்சி கொஞ்சமும்களைப்பதில்லை. கொலைகள்புரிவதும், சதிகள்செய்வதும், நாசங்களைவிளைவிப்பதுமே சனநாயகஉரிமையென்றும், பிரசாசுதந்திரமென்றும் அவர்கள் கருதுகிறுர்கள் போலும். அவர்கள் இவ்விதநோக்கம் கொண்டிருக்கிறுர்கள்என்பதைப்பேச்சுமூலமாகவும் எழுத்துமூலமாகவும் அவர்கள்செய்துவரும் பிரசாரமும், அவர்களதுமற்றும்நடவடிக்கைகளும் போதியவாறு ருசுப்படுத்துகின்றன. இன்னும் அவர்களின் இவ்விதநடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அரசாங்கத்துக்கோ அன்றேல் பொதுமக்களுக்கோ உரிமை கிடையாதென்று கருதுவதாகவும் அவர்களதுபிரசாரமும், நடவடிக்கைகளும் நிரூபிக்கின்றன.

இவ்விதநிலைமையை எந்தஅரசாங்கமும், அதிகாரபீடத்திலுள்ள எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளமுடியாது. அப்படிஏற்றுக்கொள்ளுமாயின் அந்த அரசாங்கமும், அதிகாரபீடத்திலுள்ள கட்சியும் இல்லாதொழியவேண்டியதுதான். பொதுமக்களும அபாயத்துக்குள்ளாக வேண்டியதுதான். ஆதலால் அரசாங்கம்இவ்விதசட்டவிரோதமான நடவடிக்கைகளையெல்லாம் தனதுமுழு சக்தியையும் பிரயோகித்து ஒழித்துவிடுமாறு உறுதிகொண்டுவிட்டது. அரசாங்கத்தின் இம்முயற்சியிலே சகல பிரிவுகளையும்சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் முழுமனதுடன்தொடர்ந்து ஒத்துழைப்பார்களென்பது நிச்சயம். சென்றவருடம் புரட்டாசிமாசம் இந்தியபோர்வீரர்கள் ஐதிராபாத்திலே பிரிவேசித்ததுமுதல் இவ்வருடம் ஆடிமாதம் 31-ந்திகதிவரை கிராமாதிகாரிகள்உட்பட 400 பேர்களைக் கம்யூனிஸ்தர்கள் படுகொலைசெய்திருக்கிறுர்கள். கம்யூனிஸ்தகட்சிமீது சென்றமாசம் 26-ந்திகதியன்று தடைஉத்தரவு சென்னைமாகாண அரசினராலே பிறப்பிக்கப்பட்டபின் அம்மாசமுடிவுவரை மொத்தமாக நூறுகம்யூனிஸ்தர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறுர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 434. Eng.

## உருவச் சிலைகள்

சிற்சில பிரபலஸ்தர்களுக்குக் கௌரவமாக அவர்களின் உருவச்சிலைகளை நிறுவுவதாலே தங்கள்நன்றியறிதலை அவர்களுக்குக்காண்பிப்பது அநேக தேசங்களில் வழக்கமாயிருந்துவருகிறது. சரித்திரப்பெருமைவாய்ந்த மனிதர்களும், கவிஞர்களும், மற்றும் தொகையானோரும் பாக்கங்களிலும், பிரஸ்தாப மைதானங்களிலும், சந்தையுள்ள இடங்களிலும் கல்லில் அல்லது கருங்கல்லில், செம்பில் அல்லது வெண்கலத்தில் என்றைக்கும் போழியாதவர்களாய் நிலைபெற்றிருக்கின்றார்கள்.

இதுசம்பந்தமாய் மனிதர்கள்மாத்திரமல்ல, ஆனால், நாய்கள், குதிரைகள்போன்ற மிருகங்கள்தானும் ஞாபக சின்னங்களில் அழியாமல் நிலைநாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கஐக்கியதேசத்திலுள்ள ஓர் சிறியபட்டினமாகிய என்றர்பிறைஸ் எனுமிடத்திலே "செல்வச்செழிப்பைக் கொண்டுசெல்லும்'பொல்வீவில்' என்ற கொள்ளைநோய்"க்கு நன்றியறிதலாக அர்ப்பணஞ்செய்யப்பட்டது எனும் கல்வெட்டுடன் பொல்வீலுக்குச் சமர்ப்பணஞ் செய்யப்பட்ட ஞாபகசின்னமொன்றுதானும் நீறுவிநிற்கின்றது. ஓர்காலத்திலே பொல்வீவில் என்ற கொள்ளைநோய் அங்கு பருத்திப்பயிர் முழுவதையும் அழித்துவிட்டதாக அறியப்படவேண்டியிருக்கிறது. அதனால் அழிவையுண்டுபண்ணும் இந்தக்கொள்ளைநோயை எதிர்த்து நின்றுபிடிக்கக் கூடிய புதியஇனமான பருத்திப்பயிர்கள் கண்டறியப்பட வேண்டியிருந்தன. அழிவையுண்டாக்கும் இந்தப்புல்லுருவியின்படையெடுப்புகளுக்கு வெற்றிகரமாக எதிர்த்துநின்றுபிடிக்கக் கூடிய அநேகபுதிய பருத்தியினங்கள் கண்டறியப்பட்டமையாலே அதுமுதல் இந்தச்சிறியபட்டணத்தின் செல்வச்செழிப்பு எல்லையில்லாது பெருக்கமடைந்து கொண்டுவரலாயிற்று. இதற்குநியாயம் புதியஇனமான அந்தப்பருத்தி அதிகந் திருத்தமான தரத்தைச் சேர்ந்ததென்று நிரூபிக்கப்படலாயிற்று.

சோல்ற்லேக்நகரிலே 'கல்ஸ்' எனப்படும் ஓர் இனக் கடற்பறவைகளைக் கௌரவிக்குமாறு ஞாபகசின்னம் ஒன்று நிறுவப்பெற்று இருந்துவருகிறது. அவைகள் இந்தவாவிகளிலே தங்கள்வசிப்பிடத்தைக் கண்டுகொண்டன. அவற்றிலே அவைகள்சஞ்சரித்திருந்து அநேகவருடங்களின்முன் வெட்டுக்கிளிகளால் உண்டான ஓர் பிளேக்நோயிலிருந்து அந்நகர்வாசிகளைக்காத்து, அத்தாலே அவர்கள் பயிர்களையும் பாதுகாத்துவைத்தன.

மரம், செடிகளுக்கெனநிறுவப்பட்ட ஞாபகசின்னங்களை நாம்இன்னும்காணவில்லை. ஆனால், மரம்செடிகளுக்கென்று எக்காலத்திலாவது ஞாபக சின்னங்கள் அர்ப்பணஞ்செய்யவேண்டி வருமானால், சிங்கோனாமரந்தான் தம்ப பாதத்தின்மேல் ஸ்தாபிக்கப்படவேண்டிய முதல்மரமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், உலக முழுவதிலும் பயங்கர மலேரியாவிலிருந்து லட்சக்கணக்கானபேர்களைப் பாதுகாத்துவருகின்ற குயினைன் தயாரிக்கப்படுகின்றசிங்கோனாவைத்தருவது இந்தமரந்தான்.

தற்போது இல்லாதொழிந்துபோன சர்வதேசசங்கத்தின் நிபுணத்துவம் வாய்ந்த மலேரியாக் கொம்மிற்றியின் அறிக்கையிலே குயினைனின் முக்கியத்துவம் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இந்தஅறிக்கை 1938-ம் ஆண்டுபிரசுரமாயிற்று. இதிலே மலேரியா ஒருதரம்கண்டால் 5முதல் 7நாட்களுக்குப் 15 முதல் 20 கிறேயின் குயினைன் அருந்துமாறு அவர்கள் ஆலோசனைகூறியிருக்கின்றனர். மலேரியாக் காலமுழுவதும் அதுவாராமல் ஓர்பாதுகாப்பாகத் தினமும் 6 கிறேயின் குயினைன் அருந்திவருதல்புத்தியாகுமென்று அவர்கள் கருத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

## மரணசங்கதி

வதிரிப்பதிவாசரும், இரணதண்டிகைக் கனகராயமுதலியார்வழித்தோன்றலும், அறிவானுபவம்மிக்கவரும், இங்குள்ள திருஇருதயநாதர் கல்லூரியில் நீண்டகாலம் ஆங்கிலஆசிரியராகத் தொண்டாற்றிஇளைப்பாறியவரும்,சங். F. A. வேணுட்விற்தாவர்களின் மாமனாருமாகிய திரு. அந்தோனிப்பிள்ளை பிலிப் (ஹென்றி)அவர்கள் தமக்குண்டான நோய்காரணமாகச் சிலநாள் வருந்திக் கடைசித் தேவதிரவியஅனுமானங்களைக் குறைவறப் பெற்றுச் சென்றமாதம் 27-ந்திகதி 4 மணியளவிலே மரணத்திரையில் மறைந்தாரெனும் துயரசெய்தியைஅறிந்து பெரிதும்மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்குவயது 70. இவர் பெரிதும்அனுதாபசிந்தையுடையராய்ப் பரோபகாரசேவை, சமூகத்தொண்டு ஆதியவற்றில் ஈடுபட்டுவந்தார். இங்குள்ளதிருஇருதயநாதர் கல்லூரிக் கட்டிடத்தைப் புதிதாகநிர்மாணிக்கும் போது வண. S. A. பெஞ்சமின்சுவாமியாருக்கு. உறுதுணையாயிருந்து வேண்டியஉதவிகளை அவ்வப்போது இவர் செய்துவந்தார் இவரதுஅறிவாற்றல் காரணமாகச் சாதிசமயபேதமின்றி எல்லாராலுமே நன்குமதிக்கப்பெற்றுவந்தார். இவர்ஆசிரியத்தொழிலிலிருந்து இளைப்பாறியதும் சமூகசேவைகளிலீடுபட்டு, ஐக்கியசங்கத்தின் காரியதரிசியாகவும், பின்அதன்தலைவராகவும் பதவிவகித்திருந்தார். கரவைக் கத்தோலிக்கவாலிபசங்கத்தின் பாதுகாவலராயிருந்து அதன்வளர்ச்சிக்காகப் பெரிதும்உழைத்தார். திவ்வியபூசைகாண்பதிலும், செபமாலைசொல்லுவதிலும் விசேஷகரிசனைபூண்டவர். நெடுநேரத்தைக் கோயிலிலே செலவழிப்பார். மறுநாள்சாயந்தரம் அழகியபேழையில் வைக்கப்பெற்ற இவரதுசரீரம் இவரின்நெருங்கிய உறவினராகிய வண. P. நீக்கொலஸ்சுவாமியவர்கள், வதிரிக் கட்டளைக்குரவர், உதவிக்கட்டளைக் குரவர்சமேதராய்த் துக்க சங்கீதம் பாடிச்செல்ல, இனசனர், சிநேகிதர், சுற்றத்தவர்சமேதராய்ப் பேரப்பிள்ளைகள் பேழையைக் காத்தேந்திக் கோயிலுக்கும், பின் மோட்டர்வானில் வேதாசார, தேசாசாரமுறைகளுடன் சேமக் காலைக்கும் கொண்டுசென்று புதிய கல்லறையில் வண. P. நீக்கொலஸ் சுவாமியவர்கள் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க நல்லடக்கஞ்செய்யப்பட்டது. இவரையிழந்து துன்புறும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளுடன் நானும் அனுதாபப்படுகிறேன்.

R. I. P.

—கடிதர்

## தேவதைக்கு மூக்குப்பலி

தேவதைக்குப்பலிகொடுக்க மனிதரின்மூக்குகளை அறுக்கும் விஸர் மஞ்சேரியாஎன்பவனைக் கண்டுபிடிக்கப் பம்பாயிலிருந்து சௌராஷ்டிரமாகாணத்துக்குப் பொலிசார்அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர். அவனதுதலையைக் கொண்டுவருவாருக்கு 5,000 ரூபா பரிசுகொடுக்கப்படும். சென்றசில மாதங்களில் இப்படிமூக்கறுக்கும் மஞ்சேரியாவின் கோஷ்டியைச்சேர்ந்தவர்கள் 150 பேரின் மூக்குகளை வெட்டிக் கொண்டுபோனதாகச் செய்திபரவியது. சௌராஷ்டிரஅரசாங்கம் இச்செய்தியைமறுத்து 23 பேரின்மூக்குகள்தான் அறுபட்டிருக்கின்றனவென்று தெரிவித்துள்ளது. இச்சம்பவங்கள்நடைபெற்ற கிராமங்களிலே பொலிசார் பந்தோபஸ்துச் செய்துவருகின்றார்கள்.

---

## சத்தியவேத பாதுகாவலன்
**Supplement to the Catholic Guardian**

வியாழக்கிழமைகளில் பிரசுரமாகும்

**கையொப்ப விகிதம்**

முற்பணமாகக் கட்டவேண்டும்

| தமிழ் | | இலங்கை | தமிழும், இங்கிலிசும் | |
|---|---|---|---|---|
| வருஷம் | 5-50 | | வருஷம் | 10-50 |
| அரை வருஷம் | 3-00 | | அரை வருஷம் | 5-50 |
| | | மற்றும் தேசங்களுக்கு | | |
| வருஷம் | 6-00 | | வருஷம் | 11-00 |
| அரை வருஷம் | 3-25 | | அரை வருஷம் | 5-75 |

விளம்பரங்களுக்கும், கையொப்பங்களுக்கும், மனேஜர் அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் என்று எழுதவேண்டும்.

மற்றும் விஷயங்கள்பற்றி, பத்திராதிபருக்கு எழுதவேண்டும்.

---

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்குஅழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனால், உமது உணவை நன்றாய்மென்று அருந்தவும் உதவுகின்றன. இது நீர் உண்பதை நன்கு சீரணிக்கச் செய்வதில் இன்றியமையாத ஓர் காரியமாகும்.

துரதிஷ்டவதமாய் உமது இயற்கைப் பற்களை நீர் இழந்துபோய் விட்டீரானால், இனி நீர் செய்யக்கூடிய சிறந்த காரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர்பல்வைத்தியரை நாடிப்போக வேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்றாகநின்று பிடிக்கக் கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம் புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப் பற்களை நாம்செய்து உதவிவருகின்றோம். இவ்வாறு பற்களை அமைக்கும் முறையானது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதிகம் புதிய முறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம் நம்மைச் சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை.

நாம்செய்யும் ஒவ்வோர்பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்றோம். எப்போதும் திருப்தியடைந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமது சிறந்த பிரசித்தகாரர்கள்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில், அல்லது சிலவேளை அதற்குமுன்தானும் சாமானிய கண்கள் பார்வையில் குன்றும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இதுவரை அதிகம் நெகிழ்ந்து உறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது கடினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும் இயற்கையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக் கருமம் ஆற்றத் தவறுகின்றன. அப்போது இந்த ஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனால் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும், அதிகம் பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துகள் களங்கமுற்று ஒன்று மற்றொன்றினுள் சொருகுகின்றன. பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின் கண்கள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத் தூரம்முற்றும்நன்றாயிருக்கிறது. ஆனால் சமீபவேலைக்கு [illegible] திருக்கிறது.

கண்பார்வையைப் பரிசோ[illegible]பதிலும், தகுதியான மூக்[illegible] கண்ணாடிகளைத் தெரிவுசெ[illegible] கொள்வதிலும் நமக்குள்ள அனுபவத்தை உமக்கு முற்றாகக் கையளிக்கிறோம். இக்கால்மாதிரியான புத்தப்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம் கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கண்பார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணாடிகள் போடவேண்டியதில்லை. ஆனால் இவர்களின் நட்பும், ஆதரவும் ஒரு மூக்குக்கண்ணாடியை விற்பதிலும் எவ்வளவோ கூடிய மதிப்புள்ளன. உமது கண்களில் பழுது காணும்போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிறோம்.

பத்திருனுஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். கூரேதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

தாமஸ்ரோட்றீகோ அன்சன்ஸ்,
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing [illegible] Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 6 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org